335

OFFICE ... BOOKS
7 - DEC 1929
MADRAS

தொகுதி 8.] 1929ஞு நவம்பர்மீ 1வ [பகுதி 10.

# மனமோகினி

ஆக்கியோர்
ஆரணி. குப்புசாமி முதலியார்



பிரசுரகர்த்தர்
...சாமி முதலியார்,
... சென்னை.

# மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களை வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922௵ பிப்ரவரி௴ 1௳ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" 'கற்பகச் சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" 'இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" என்ற நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது இரத்தினபுரி இரகசியம் 3-ம் பாகம் என்கிற நாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரி௴ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0
வெளி நாட்டிற்கு ,, 3—0—0

**இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| அமராவதி 2 பாகமும் | ரூ. | 4 | 0 | |
| பவளத்தீவு 2 பாகமும் | ரூ. | 3 | 0 | |
| ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் | ரூ. | 9 | 10 | 0 |
| அர்ஜுனஸிங், சுந்தர் | ,, | 0 | 2 | 0 |
| அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் | | 1 | 12 | 0 |
| கற்பகச்சோலையின் அற்புதக்கொலை | ரூ. | 1 | 4 | 0 |
| கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும் | ,, | 3 | 4 | 0 |
| இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம் | ,, | 2 | 0 | 0 |
| இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம் | ,, | 1 | 12 | 0 |
| சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி | ,, | 2 | 0 | 0 |

---

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

கோமளம் அவன் வார்த்தைகளைச் செவி யேற்கவே யில்லை. அவனைக் கண்டதே "ஓகோ! நாம் மறுபடி யிவன் கையிற் சிக்கிக்கொண்டோமே" என்று அறிந்ததே சொல்லொணாத் திகிலும் நடுக்கமும் உண்டாய்விட்டது. அவள் மூர்ச்சித்து விழுந்துவிடா விட்டாலும் புத்தி நிலையில் நிற்காமல் எல்லாம் பெருங்கலவரமும் குழப்பமுமாய்விட்டது. என்ன சங்கதி நடக்கிறது, நாம் என்ன செய்யவேண்டியதென்று ஒன்றுமே அவளுக்குப் புலப்படவில்லை.

இவ்விஷயத்தில் குரு எவ்விதமாய் நடந்துகொண்டான் என்பதைப்பற்றி சுருக்கமாய்க் கூறுகிறோம். அவன் கோமளவல்லியைப் பிடித்து இரகசியமாய்த் தன் வீட்டிற்குக் கொண்டுவந்து விடவேண்டுமென்று அச்சமயம் சற்று தூரத்தில் பாளைய மிறங்கியிருந்த கிப்ஸி ஜாதியாரிடம் ஏற்பாடுசெய்து அவர்களுக்குப் போதுமான பணம் கொடுத்தான். அவள் வசிக்கும் வீட்டையும் பெயர் அடையாளங்கள் முதலிய குறிப்புகளையும் அவர்களுக்குக் கூறி, இன்ன விடத்திற்கு நம்மைக் கொண்டு வந்திருத்கிறார்களென்று அவள் தெரிந்துகொள்ளா வண்ணம் நீங்கள் செய்யவேண்டும் என்று திட்டம் செய்தான்.

அவ்வாறே ஒரு மூதாட்டியும் அவள் புத்திரர்கள் இருவருமாக வந்து கோமளத்தைப் பிடித்துக்கொண்டு போகையில் எங்கோ தூரமான விடத்திற்குக் கொண்டுபோவதாய் அவள் கருதிக்கொள்ளவேண்டுமென்று சுற்று வழியாய்க் கொண்டு போனார்கள்.

ஒருதரம் அவள் தன் கையில் அவள் சிக்கிவிட்டால் பின்னால் தன் இஷ்டத்தை நிறைவேற்றிக்கொள்ள அவன் எத்தகைய அக்கிரமச் செயல்களுக்கும் பின்னிடைகிறவனல்ல. அவனிடமிருக்கும் வீட்டுககாரிய[illegible] முழுதும்



186539
சென்னை-600 008

அவன் காரியங்களுக்கு உடந்தையானவள். கோமளவல்லியின் ஆகாரத்தோடு வைக்கப்பட்ட ஒயின், சாராயம் இவற்றில் மயக்க மருந்து கலக்கப்பட்டிருந்தது. நற்காலமாய்க் கோமளவல்லி அவற்றை யருந்தவேயில்லை. அன்றிரவு அவளுக்கு வைக்கப்பட்ட இராப்போஜனத்தில் இருந்த ஒயின் சாராயம் இவற்றிலும் மருந்து கலந்திருந்ததோடு காபியிலும் கலந்திருந்தது.

அன்று இரவு ஆகாரத்தை வைத்துவிட்டுச் சென்ற வேலைக்காரி குருவினிடம் சென்று இன்று அவள் மிக்க சோர்வடைந்துவிட்டாள். ஆகார மருந்தாவிட்டாலும் ஒயினாவது காப்பியாவது கட்டாயம் அருந்தாம லிருக்க முடியாது என்று உறுதியாய்க் கூறினாள்.

ஆனால் இரவு கோமளவல்லி சுவரின்மேலிருந்த கம்பளிகளை யறுத்து ஆயாசமடைந்தபோது வெறும் சுத்த ஜலம் மட்டுமே யருந்தினளென்பது நாம் அறிந்த விஷயமே. ஜலத்தில் அம்மருந்தைக் கலக்க முடியாது.

குரு வேலைக்காரியின் வார்த்தைகளைப் பூரணமாய் நம்பிக்கொண்டே படிகளில் ஏறிச் செல்லும்போது சந்தோஷமாய்த் தனக்குத் தானே அவ்வாறு பேசிக்கொண்டான். அவன் எதிர் பார்த்தபடி கோமளம் அம் மருந்து கலந்த பானத்தி லெதையேனும் அருந்தித் தன்னை மறந்து விழுந்து கிடந்திருந்தால் இப்பரம சண்டாளன் அவள் கற்பை யழித்துவிட்டு அவள் ஸ்மரணையற் றிருக்கும்போதே அவள் வீட்டில் கொண்டுபோய் போட்டுவிடச் செய்திருப்பான். அப்போது தான் எந்த வீட்டிற்குக் கொண்டுபோகப்பட்டதென்றும் யாரால் கற்பழிக்கப்பட்டதென்றும் கண்டறிய முடியாதென்பது அவன் கருத்து. ஒருசமயம் அவள் தன்மேல் சந்தேகப்பட்டால் நம் தொழிலுக்கும் மரியாதைக்

கும் யாரும் அதை நம்பமாட்டார்கள் என்பது அவன் யோசனை. ஒருசமயம் தன் வேலைக்காரியை எங்காவது கண்டு அவள் மூலமாய் வீட்டை யறிந்துகொள்ளக்கூடு மாதலால் கொஞ்சநாட்களுக்கு அவளை யெங்காவது வெளி யூருக் கனுப்பிவிடுவதென்று உத்தேசித்திருந்தான்.

இவ்வளவு ஆலோசனையோடு சகல ஏற்பாடுகளும் செய்திருந்ததால் தன் கோரிக்கை நிறைவேறு மென்ற பூரண நம்பிக்கையோடு மாடிமேல் ஏறிச்சென்று கோமள வல்லி அடைக்கப்பட்டிருந்த அறைக்குள் நுழைந்தவன், அங்கு நடந்திருக்கும் சம்பவங்களையும் இரகசியக் கதவு திறக்கப்பட் டிருப்பதையும் கோமளம் ஓடிவிட் டிருப்பதை யும் கண்டபோது, அவன் மனோ நிலைமை யெவ்வா றிருந் திருக்கும் என்பதை இதை வாசிக்கும் நண்பர்களே உணர் ந்துகொள்ளலாகும்.

குருத் தொழிலி லிருப்பவன் இத்தகைய விபரீதமான கொடிய அக்கிரமங்களைச் செய்வானோவென்று சிலர் சந் தேகிக்கலாகும். உலகம் நல்லது கெட்டது இரண்டையும் உடையது. பிராம்மணரிலும் நீச்சன்போல் நடப்பவன் எங்கோ ஒருவனாவது இருப்பான். நீச்சரிலும் பிராம்மண னைப்போல் நடப்பவன் எங்கேனு மொருவ னிருப்பான். சந்நியாசிகளா யிருப்போரிலும் நெறிதவறி நடப்பவன் இருப்பான். அவ்வாறே எதிலு முண்டு. அப்படிப்பட்ட தைத்தான் "இலைப்பழுப்பு எங்குமுண்டு" என்று கூறுவது. அவ்வாறு ஒவ்வொருவர் இருப்பதாலேயே அந்த இனம் முழுமையுமே யப்படித்தான் குற்றமுடையதென்று கருதுவ தாவது கூறுவதாவது பெருங் குற்றமாகும்.

மேற் கண்டவாறு கோமளம் ஓடிவிட்டதைக் கண் டதே சுகானந்தனுக்குச் சொல்லொணுக் கோபமும் பய

மும் உண்டாய்விட்டது. கோபத்தைக்காட்டிலும் இப்போது பீதியே அவன் மனதை யதிகமாய்ப் பற்றிக்கொண்டது. அவன் எவ்வளவோ முன்யோசனையோடும் சாமார்த்தியத்தோடும் செய்த ஏற்பாடுகளனைத்தும் கடைசியில் வியர்த்தமாய்ப் போய்விட்டன. அதோடு பலவித பயங்களுக்கு வழி யுண்டாய்விட்டது.

கோமளவல்லி யிப்போது தான் அடைக்கப்பட்டிருந்த வீடு இன்னதென்று எப்படியும் தெரிந்துகொள்வாள். அதோடு அவள் தான் தப்பித்துக்கொண்ட மாதிரியையும் வெளிசென்ற வழிகளையும் கூறுவாளேயாயின் சோதனையில் யாவும் சந்தேகமின்றி ருசுவாய்விடும். அதன்பின் தான் தப்பித்துக்கொள்ள முடியாது. இவ்விதமான பல கலவரங்களோடு அவன் கோமளவல்லி சென்ற கள்ளக் கதவின் வழியாகவே சென்றான். அந்தப் பக்கங்களில் எந்த வழியாலும் அவள் வீட்டைவிட்டு வெளிச் சென்றதாய்த் தெரியவில்லை. தெருக்கதவும் பூட்டப்பட்டே யிருந்தது. கடைசியில் மாடிக்குச் செல்லும் படிக்கட்டுகளிருக்கும் கூடத்திலிருந்த கதவு பூட்டப்படாமல் திறந்திருப்பதைக் கண்டு அவ்வழியே சென்றபோது வீட்டிற்குப் பின்னுள்ள முற்றத்திற்குச் செல்லும் கதவு திறக்கப்பட்டிருந்ததைக் கண்டு அங்கு சென்றான்.

அவ்வழியாகத்தான் கோமளம் வெளிசென்றிருக்க வேண்டுமென்று தெரிந்துகொண்டான். அவ்வழியாகச் சென்றால் எதிரிலிருக்கும் கோயிலின் கல்லறைக்குள் தான் செல்லலாமே யொழிய வேறெங்கும் செல்ல பாதை கிடையாது. ஆகையால் அங்குதான் சென்றிருப்பாள் என்று தேடி வந்துதான் நாம் முன் கூறியபடி கோமளவல்லியைக் கண்டு பிடித்தான். அவள் வைத்துக்கொண்டிருந்த தீபம்

மங்கலாய் எரிந்துகொண் டிருந்தாலும் ஆள் இருக்கு மிடத்தைக் காட்டப் போதுமானதா யிருந்தது.

அவள் இருந்த கலவர நிலையில் குரு கூறிய மொழிகள் அவள் செவிகளில் ஏறவில்லை. தீபவெளிச்சத்தால் அவள் முகம் வெளுத்து விகாரமுற்றிருப்பதைக் கண்ட சுகானந்தன் அவள் கரத்தைப் பிடித்துக்கொண்டு "நான் கூறுவது உனக்குக் கேட்கிறதா" என்றான்.

அவன் காம் தன் மேற் பட்டதே கோமளம் அரவத்தால் தீண்டப்பட்டவள்போல் துள்ளியெழுந்து தன் நிலைமையைப் பூரணமாய் உணர்ந்தவளாகி ஆத்திரத்தோடு "விடையா என்கரத்தை" என்று அதட்டிக் கூறினாள்.

சுகானந்தன்:— "கோமளவல்லி! கோமளவல்லி! உன்னை வேண்டிக்கொள்கிறேன். நான் கூறுவதைக்கேள். என்னை மன்னித்து விடு" என்று இரக்கமாய்க் கூறினான்.

கோமளம்:—"அய்யா! நீ யெனக்குக் கொடிய தீங்கு செய்தாய் என்பதிற் சந்தேகமே யில்லை. ஆயினும் நீ யுண்மையாகவே அதற்காக இப்போது மனஸ்தாபப்படுகிறதாயின்—........" என்பதற்குள்,

சுகா:—"ஓ! கடவுளறிய நான் செய்துவிட்ட அவசரச்செயலுக்காக மிக்க வருத்தப்படுகிறேன். நான் அவ்வளவு தைரியத்தோடும் துணிகரத்தோடும் என்னை மறந்து அவ்வாறு செய்துவிட்டதற்கு, நான் உண்மையாய் உன்மேற்கொண்ட அடங்காக் காதலே காரணம். நீ பேசாமல் என்கூட என் வீட்டிற்கு வா. நான் உன்னை மெய்யாகவே மரியாதையோடு தெருவாசற்படி வழியாய் அனுப்பிவிடுகிறேன்" என்றான்.

அவன் சாந்தமாய் நம்பிக்கையுண்டாகும் வண்ணமாய் அவ்வாறு கூறினும் தெய்வ சங்கல்பத்தால் அவன் கூறுவ தெல்லாம் அடியோடு பொய்யென்றும் தன்னை வஞ்சிப்ப தற்கே அவ்வாறு கூறுகிறானென்றும் ஏககாலத்தில் அவள் மனதிற்பட்டது.

அவள் உடனே "இல்லை. இல்லை யொருகாலும் வர மாட்டேன்" என்று கூறியதே அவன் முகத்தில் உண்டான கலவரத்தையும் கோபத்தையும் கண்டதே தான் கருதியது சற்றும் ஐயமின்றி உண்மையேயென்று அவள் மனதிற் பட்டுவிட்டது.

அவள் சுகானந்தனை நோக்கித் துணிகரத்தோடு "அய்யா! நான் இரவு முழுமையும் இங்கேயே தங்கியிருந்து விடிந்தபின் கோயிலுக்கு வரும் ஜனங்களோடு வெளியில் செல்வேன். நீ யென்னை யேதேனும் தொந்தரை செய்தால், அண்டை அயலில் இருக்கும் வீடுகளிலுள்ளவர்களெல்லாம் விழித்துக் கொள்ளுமாறு சத்தம்போடுவேன்" என்றாள்.

சுகா:—"முட்டாள் பெண்ணே நீ யென்னைத் துணிகரமாய் நடந்து கொள்ளுமாறு செய்துவிடுகிறாய். இந்த விடம் பூமியின் கீழிருக்கிறது. நன்றாய்ப்பார். நமக்குள் நடக்கும் விஷயத்தைக்காண இங்கு ஒரு பூதருமில்லை. இங்குள்ள கல்லறைகளில் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் சந்நியாசிகள் எழுந்து வெளியில் வந்தால்தான் பார்க்கலாகும்; இன்றேல் அவர்களுடைய ஆவேசங்கள் வர வேண்டும். நான் இப்போது முழுதும் துணிந்த நிலைமையி லிருக்கிற மனிதன். என் கண்முன் என் கௌரவமும், மானமும், கீர்த்தியும், என் என் உயிருமே ஆபத்திற் சிக்கிக்கொண்டிருக்கின்றன. அவைகள் உன் கையில் சிக்கிக்கொண் டிருக்கின்றன. ஆகையால்

நீ இந்த விடத்தில் கடவுள் முன்பாகவும் இங்குள்ள கல்லறைகளில் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் சந்நியாசிகளின் முன்பாகவும், அவர்கள் ஆவேசங்களின் முன்பாகவும் நடந்த சங்கதியை ஒரு பூதருக்கும் வெளியிடுவதில்லையென்று பிரமாணம் செய்துகொடுக்க வேண்டும்'' என்றான்.

கோம:—“இல்லை யில்லை. இத்தகைய சத்தியம் ஒருபோதும் நான் செய்யமாட்டேன். நான் மனம்விட்டுக் கூறுகிறேன். இச்சங்கதியை நானே ஒருவருக்கும் கூறவேண்டிய அவசியமேயில்லை. ஒருவருக்குமட்டும் நான் கூறியே தீரவேண்டும். அவர் இங்கு வந்ததே நான் வீட்டிலிருந்து காணுமல் போய்விட்ட சங்கதி யெப்படியும் அவருக்குத் தெரிந்துவிடும். நான் அதற்குத் தக்க காரணம் கூறியே தீரவேண்டும்'' என்றாள்.

“சுகா.—ஆ! நீ கூறுவது ஜெகதீசனைப்பற்றி. நான் உன்மேல் கொண்டிருக்கும் காதலுக்குப் போட்டிக்காரன். இந்த விஷயத்தை யவனிடம் கூறவேண்டியது அவ்வளவு அவசியமா? அது என்மேல் அவனுக்கு அதிக கோபத்தையுண்டாக்குமே யன்றி வேறென்ன பிரயோஜனம்? எந்தச் சண்டையும் இரண்டு பேர்க்குள்ளாகவே முடிய வேண்டும். அதில் தன் பக்கத்தில் நீதியிருந்து ஜெயமடைபவன்கூட நஷ்டமின்றித் தப்புவதில்லை'' யென்றான்.

கோம:—“இதனுல் என்ன சம்பவிப்பதாயினும் நான் அவருக்குச் சங்கதியைக் கூறியே தீரவேண்டும். ஆயினும் ஒரு வாக்குத்தத்தம் நான் உமக்குக்கூறுவேன். அதாவது இச்சங்கதியைப்பற்றி சற்றும் வெளியிடாமல்

பொறுத்துக் கொள்ளும்படி அவரைக் கேட்டுக்கொள்ளுவேன். ஆனால் நீர்மட்டும்....'' என்றதே,

சுகானந்தன் அடங்காக் கோபமடைந்து "ஓ! இப்போது நீயா எனக்கு நிபந்தனைகள்கூறத் தொடங்கிவிட்டாய்! என் க்ஷேமத்திற்காக உன்னை யடியோ டழித்துவிடுவேன். என் வஞ்சத்தையும் அதே காலத்தில் தீர்த்துக்கொள்வேன். நான் கூறியபடி நீ சத்தியம் செய்யவேண்டும். ஓ அதிகப் பிரசங்கிப் பெண்ணே உடனே சாஷ்டாங்கமாய் விழுந்து நான் சொல்வதுபோல் செய்'' என்று கர்ச்சித்தான்.

கோபத்தால் அவன்முகம் கோரமான விகாரமடைந்து விட்டது. நெஞ்சு உலர்ந்துவிட்டது. கோமளவல்லி மிக்க பீதி யடைந்துவிட்டாள். அவள் தைரியம் அடியோடு பறந்துபோய் விட்டது. "அந்தோ கடவுளே என்மேல் இரக்கம் காட்டும்! இரக்கம் காட்டும்!'' என்று பணிந்தாள்.

சுகா:— "நான் சற்றும் இரக்கம் காட்டமாட்டேன். எனக்கு ஒரு இரக்கமும் தெரியாது. இந்த இரவு நடந்த சங்கதியை யொருவருக்கும் வெளியிடுவதில்லை யென்று நான் கூறியபடி சத்தியம் செய். இன்றேல்......'' என்றான்.

கோமள:— ''ஓ நீ யென்னைக் கொன்றாலும் சரி நான் ஒரு போதும் அத்தகைய பிரமாணம் செய்யவே மாட்டேன். ஆண்டவன்என்னைக் காப்பாற்றுவார்''என்றாள்.

சுகா:—"ஓ! அகங்காரியே. அப்படியானால் நீ மறுபடி முன்னிருந்த அறைக்கு வரவேண்டியதே. நீ என் பிரியத்திற்கு இணங்கும்படி நான் உன்னைக் கட்டாயப்படுத்துகிறேன் பார்'' என்று ஒருகாத்தால் அவளைப் பிடித்துக்கொண்டு, அவள் கோவென்றலறத் தொடங்கியதே

மற்றொரு கரத்தால் அவள் வாயைக் கெட்டியாய் இறுத்தி மூடிக்கொண்டான்.

அச்சமயம் திடீலென்று கருத்த உடையணிந்த ஒரு ஸ்திரீ ஒருகம்பத்தின் மறைவிலிருந்து துரிதமாய் அவேசம் போல் அவர்களெதிரில் வந்து நின்ருள்.

அம்மாதைக் கண்டதே சுகானந்தன் "ஆ! என் சனியனே!" என்று கோமளவல்லியைத் தட்டென்று விட்டு விட்டான்.

OFFICE OF THE REGIST 7 - DEC 192 MADRA

---

## 21 - வது அத்தியாயம்

கோமளவல்லி கீழே விழுந்தபோது அவள் சிரம் ஒருகம்பத்தில் பட்டதால் உடனே ஸ்மாணை நீங்கிவிட்டது. அவளுக்கு மறுபடி ஸ்மாணை வந்தபோது முன் நடந்த பயங்கர சம்பவங்களனைத்தும் கவனத்திற்கு வந்ததே பெருந்திகிலோடு கண்களைத் திறந்து பார்த்தாள். ஆனால் சற்று நேரத்திற்குள் அவளுடைய பயம் திகில் யாவும் போய்விட்டன. ஏனெனில் முதலில் தான் இருப்பது முன் அடைக்கப்பட்டிருந்த சுகானந்தன் வீட்டிலிருந்த அறையல்லவென்று தெரிந்தது. அறையில் ஒரு தீபம் எரிந்துகொண் டிருந்ததால், சற்று நிதானமாய் உற்றுப்பார்த்ததே அது தன் வீட்டில் தான் தினம் சயனித்துக்கொள்ளும் அறையே யென்று தெரிந்தது.

தன் சிரத்தில் ஏதோ நோயிருப்பதுபோல் தெரிந்ததும் கரத்தால் தடவிப்பார்த்தாள். தன் நெற்றியில் கட்டு கட்டப் பட்டிருப்பதை யறிந்தாள். உடனே தான் வீட்டிலிருந்து கொண்டு போகப்பட்டதும், பிறகு நடந்த சங்கதிகளும்

யாவும் மெய்யே யென்று அறிந்துகொண்டாள். ஆனால், தான் எப்படி அங்கிருந்து தப்பிவந்தது; தன்னை யார் காப்பாற்றி வீட்டில் கொண்டுவந்து சேர்த்தது என்று மட்டும் அவளுக்குச் சற்றும் புலப்படவில்லை.

கோமளம் இவ்வாறு சிந்தித்துக்கொண் டிருக்கையில் அவள் மேல் மிக்க அன்புடைய வேலைக்காரி அவள் ஸ்மரணை வந்து விழித்துக்கொண் டிருப்பதைக் கண்டதே ஆவலோடு அவளை யாலிங்கனம் செய்து கொண்டாள்.

கோமளம் அவளை நோக்கி "நான் இங்குவந்து எந் நேர மாயிற்று? யார் இங்கு என்னைக் கொண்டு வந்தது?" என்று கேட்டாள்.

வேலைக்காரி:— நீ ஸ்மரணை யில்லாத நிலைமையில் இருக்கும்போது இங்கு கொண்டு வரப்பட்டாய்; நீ வந்து ஒரு மணி நேரமாயிற்று. இப்போது விடியற் காலம் மூன்றுமணி யாகிறது" என்றாள்.

கோம:— "அய்யோ என் அத்தை! அத்தை யெப்படியிருக்கிறார்கள்" என்றாள்.

வேலைக்:— "நான் நீ காணமற் போய்விட்டதால் எவ்வளவு மனவருத்தத்தை யனுபவித்துக்கொண் டிருந்தாலும், அந்தம்மாளை மிக்க ஜாக்கிரதையோடேயே கவனித்து வருகிறேன். அந்தம்மாளுக்கு ஒரு குறையுமில்லை" என்றாள்.

கோமளம் ஏதாவது கடிதங்கள் வந்திருக்கிறதா வென்று நாணத்தோடு கேட்டாள்.

வேலைக்காரி "ஆம் ஒரு கடிதம் வந்திருக்கிறது" என்று தன் மடியிலிருந்து எடுத்து அவளிடமளித்தாள்.

கோமளம் அதைக்கண்டதே அது தன் காதலினிடமிருந்து வந்ததென்று தெரிந்துகொண்டாள். அக்கடிதத்தில் கீழ்க்கண்ட சங்கதிக ளடங்கியிருந்தன:—

"என் பிரியமான காதலியாகிய கோமளவல்லிக்கு:— நான் சுகமாய்ச் சற்று நேரத்திற்கு முன்பே யிந்தப்பெரிய நகரத்திற்கு வந்து சேர்ந்தேன். உனக்கு இக்கடிதம் எழுதிப் போட தபாலாபீசில் காலம் கொஞ்சமே யிருந்தது. நாளை காலேபோய் உன் தங்கையைக் கண்டு பிறகு கடிதம் எழுதுகிறேன். நான் வெள்ளி அல்லது சனிக்கிழமை இதைவிட்டுக் கந்தபுரிக்குப் புறப்படுவேன்.

செவ்வாய் 1719, இரத்னபுரி, } உன் அன்புள்ள ஜெகதீசன்."

இதை வாசித்துப் பார்த்ததும் கோமளவல்லி மிக்க சந்தோஷமடைந்து வேலைக்காரியை நோக்கி "நான் காணுமற்போன விஷயத்தைப்பற்றி என் சங்கதிகளைக் கூறுவதற்கு முன் தயவுசெய்து இதைப்பற்றி யுனக்குத்தெரிந்த யாவற்றையும் விபரமாய்க் கூறி விடு. நான் காணுமற்போனதைப்பற்றி நான் சமாசாரம் கூறி யனுப்பியதாக யாரோ வந்து கூறினர்க ளல்லவா? இப்போது நான் இங்கு எப்படி யாரால் கொண்டுவரப்பட்டேன்? யாவும் கூறு." என்ருள்.

வேலைக்காரி கீழ்க்கண்டபடி கூறத் தொடங்கினுள்:—

"அம்மா! நேற்று இரவு முன்னேரத்தில் நீ தோட்டத்திற்கு உலவச் சென்ருய். சமையலறையிலிருந்த கடியாரம் பத்தடித்தது. நீயந்த வேளைக்கும் திரும்பி வராதிருந்ததால் இன்னும் தோட்டத்திலிருந்தால் அதிக குளிர்ச்சியால் வியாதியுறுவாயென்று பயந்து உடனே யெழுந்து உன்னை யழைத்து வர வந்தேன். தோட்டம் முழுதும் தேடியும் நீ

எங்கும் காணப்படவில்லை. எனக்கு மிக்க பயமாய் விட்டது. மறுபடி வீட்டில் வந்து பார்த்தேன். வீட்டிலுமில்லை. ஒரு சமயம் வீதியின் பக்கமாய்ச் சென்ருயோ வென்று வீதியில் வந்து பார்த்தேன்.

அச்சமயம் கிப்ஸி ஜாதியாரைப்போன்ற ஒரு கிழவி வந்து "நான் கோமளவல்லி யம்மாளிடமிருந்து ஒரு சமாசாரம் கொண்டுவந்தேன். நீதானே யவளுடைய வேலைக்காரி?" என்று கேட்டாள்.

நான் "ஆம் ஆம். அந்தம்மாள் எங்கே?" என்றதற்கு அவள் "அந்தம்மாள் திடீலென்று ஜெகீசனுடைய உறவினராகிய இரண்டு மாதர்களைச் சந்தித்து அவர்கள் வீட்டில் இரண்டு மூன்று நாட்கள் தங்கியிருந்து வருவதாகவும், அதைப்பற்றி நீயொன்றும் கவலை யெடுத்துக் கொள்ள வேண்டாமென்றும் உன்னிடம் கூறச் சொன்ஞர்கள்" என்று கூறிவிட்டுத் துரிதமாய்ப் போய்விட்டாள்.

அவள் வார்த்தைகளை நான் நம்பக்கூடவில்லை. ஏனெனில் அம்மாதிரி நடக்கை யுனது சுபாவத்திற்கு முழுதும் மாருகவே யிருக்கிறது. அவள் வார்த்தைகளில் அவநம்பிக்கை விழுந்துவிடவே எனக்கு மிக்க திகிலும் கலவரமும் உண்டாயிற்று. உனக்கு என்ன கெடுதி நேரிடுமோ, எத்தகைய இக்கட்டில் சிக்கிக் கொண்டாயோ,எப்போது திரும்பி வருவாயோ என்று பலவிதமான கலவரங்களுண்டாயிற்று. வெளியில் சென்று பார்க்கலாமெனில் வீட்டில் உன் அத்தைக்கு ஒருவரும் துணையில்லை. நான் என்ன செய்வேன். எந்த வேலையும் செய்ய மனம் பிடிக்கவில்லை. சாப்பாட்டின் மேலும் மனம் செல்லவில்லை.

மனத்துயாணைத்தும் மிக்கக் கஷ்டத்தோடு சகித்துக் கொண்டு பெரியம்மாளுக்குச் செய்ய வேண்டிய உபசாரங்

களைச் செய்தானபின் படுத்தால் சற்றும் நித்திரை பிடிக்க வில்லை. எனக்கு அசுகமே நேர்ந்து விட்டது. கடைசியில் பொழுது விடிந்தது. என் கலவரமும் திகிலும் மிக்க அதிக மாய்விட்டது. ஆயினும் என்ன செய்வதென்று மட்டும் ஒன் றுமே புரியவில்லை.

சுருக்கமாய்க் கூறிவிடுகிறேன். தீபம் வைத்தபின் எனக்குச் சகிக்க முடியாத வேதனையாய் விட்டது. படுக் கைக்குப் போகவே மனமில்லை. பெரியம்மாளுக்குச் செய்ய வேண்டியவைகளைச் செய்து விட்டு அந்தம்மாளிடமே ஒருமணி வரை குந்தியிருந்தேன். பிறகு இரண்டு மணிக்குச் சமையலறைக்குச் சென்று அங்கு தீயெரித்துக் குளிர் காய்ந்துகொண் டிருக்கையில் வீதியில் ஒரு வண்டி வந்து நின்றச் சத்தங் கேட்டது.

நான் உடனே நீதான் வருகிறுயென்று மிக்க ஆவ லோடு எழுந்து ஓடினேன். கடவுள் தயவே நீயே வண்டி யில் வந்திருந்தாய். ஆனல் நீ ஸ்மரணை யில்லாத நிலைமையில் இருப்பதைக் கண்டதே என் மனம் மிக்க வேதனையடைந் தது. அவ்வண்டியில் ஒருமனிதனும் ஒரு மாதும் இருந்தார் கள். அவர்கள் உனக்கேதோ காயம் பட்டதென்று கூறினர் கள்.

நான் இருந்த மனக்கலவரமான நிலைமையில் அவர்கள் கூறுவது இன்னதென்று நான் கவனிக்கவே யில்லை. அம் மாது வண்டியிலிருந்து இறங்கி உன்னை வீட்டிற்குள் தூக் கிக் கொண்டுவர எனக்கு உதவி செய்தாள். நாங்கள் இருவ ரும் உன்னைத் தூக்கிக் கொண்டு வந்து படுக்கையில் சய னிக்கச் செய்து உபசாரம் செய்தபின் அம்மாது என்னிடம் ஒரு சீல்செய்த கடிதத்தைக் கொடுத்து என்னை நோக்கி,

"அம்மா! உன் எஜமானி எழுந்த பின் அவளிடம் இக் கடிதத்தைக் கொடுத்து வாசிக்கச் சொல்லு" என்று கூறி விட்டு வண்டியில் ஏறிக் கொண்டாள். உடனே வண்டி போய்விட்டது.

கோமளம்:—ஏன் அக்கடிதத்தை யென்னிடம் கொடுக்க வில்லை?

வேலைக்காரி:—"அம்மா! அந்தக் கருப்புடை யணிந்து கொண்டிருந்த மாது கூறியமாதிரியைப்பார்த்தால், நீ அக்கடிதத்தை வாசித்தால் உனக்கு மனவருத்தமுண் டாகும்போல் தோற்றியது. ஆகையால் நான் கடைசி யில் இதைக்கொடுக்கலாமென்று எண்ணியிருந்தேன்" என்று அக்கடித்தை யெடுத்துக் கொடுத்தாள்.

கோம:—"கருப்புடை யணிந்த மாதா?" என்றாள்.

ஏனெனில் அப்போதுதான் கோவிலின் கல்லறையில் தான் மூர்ச்சையடையும் சமயம் அங்கு வந்து தோன்றி யது, கருப்புடைய மாது என்ற நினைப்பு அவள் கவனத்தில் வந்தது

வேலை:—ஆம். அம்மாது உயரமான மாது. முழுதும் கருப் புடை யணிந்தவள். ஆனல் அவள் முழுமையும் கருப் புடை யணிந்துகொண் டிருந்ததோடு தடித்த முகமூடி யணிந்துகொண்டிருந்தபடியால் அவள் முகத்தை நான் காணக் கூடவில்லை. ஆனல் அம்மாதின் குரல் மிக்க இனிமையாகவும் அன்பாகவும் இரக்கமாகவுமிருந்தது, நான் எவ்வளவு துயரத்திலும் கலவரத்திலுமிருந்தா லும் அம்மாதின் இரக்கமும் துயரமுமான வார்த்தை கள் என் மனதில் உறுத்தியது.

கோம:--வண்டியில் வந்த அம்மனிதன்?

வேலே:—நான் அவன் முகத்தைக் காணவே முடியவில்லை. அவன் வண்டியை விட்டிறங்கவே யில்லை. ஆயினும் அவன் பேசியமாதிரியால் மிக்க மனக்கலக்கமும் தடுமாற்றமு முடையவனு யிருக்கிறுன் என்று தெரிந்தது.

கோமளவல்லி அம்மாதுகொடுத்த கடிதத்தைப்பிறித்து வாசிக்கத் தொடங்கினுள். அதில் அடியில் கண்டபடி யெழுதி யிருந்தது:—

"மிக்க அவமானமான இக்கட்டிலிருந்து உன்னைக் காப்பாற்றிய நான், அதன் பரிசாக ஒன்றுதான் கேட்கிறேன். அதாவது குற்றவாளியை நீ தயவுசெய்து மன்னிக்கவேண்டும். நடந்த விஷயங்களால் உன் மனம் புண்பட் டிருக்கிறதென்றும், உனக்கு நல்வழியில் புத்தி கூறும் நண்பர்களிடம் நீ நடந்த சங்கதிகளைக் கூறவேண்டியது அவசியமென்றே நீ நினைப்பாயென்றும் நான் அறிவேன். ஆயினும் நீ தயவுசெய்து குற்றவாளியை மன்னிப்பதோடு இவ்விஷயத்தை வெளியில் விடாமல் அடக்கிவிடும்படி உன் நண்பர்களையும் வேண்டிக்கொள்ளும்படி உன்னைப் பிரார்த்திக்கிறேன். நான் உனக்குச் செய்த உபகாரத்திற்குக் கேட்கும் பரிசெல்லாம் கூடி அது ஒன்றுதான். ஆனுல் இன்னொரு விஷயம். இனிமேல் உனக்கு அந்த மனிதன் மூலமாய் எவ்விதத் தொந்திரவும் உண்டாகாதென்று சத்தியமாய்க் கூறுகிறேன். நானே யதற்குப் பொறுப்பாளியா யிருக்கிறேன்"

இக்கடிதத்தை வாசித்தபின், கோமளவல்லி "ஆ! இம்மாது பெருந்தன்மையான குணமுடையவள். நம்மை முன்னுடி யொன்றும் கேட்காமல், தன் பிரியப்படி நாம் நடப்போ

மென்று நம்பிக்கைகொண்டு நமக்கு உதவி செய்தாள். பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றினுள். ஆகையால் நாம் அவளுக்குத் துரோகம் செய்யலாகாது. ஆனுல் நடந்த சங் கதியை யொளிக்காமல் நம் காதலனிடமும் வேலைக்காரியிட மும் கூறியே தீரவேண்டும். ஆனுல் அதை யொருவரிடமும் கூருமல் அவர்களுக்கு வாய்ப் பூட்டிடவேண்டும்" என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டாள்.

அதன்மேல் தன் வேலைக்காரியிடம் நடந்த சங்கதிக ளியாவும் கூறினுள். அச்சங்கதிகள் யாவும் கேட்ட வேலைக் காரி மிக்க மனவருத்தமும் கோபமு மடைந்தாலும் கோமள வல்லி கூறிய காரணங்களால் இதைப்பற்றி நாம் வெளியில் கூருமல் இருப்பதுதான் நலமென்று கருதிக்கொண்டாள்.

கோமளவல்லி கல்லறையில் விழுந்தபோது பட்ட காயம் அச்சமயம் அவளை ஸ்மரணை யிழக்கச் செய்தபோதி லும் அதிகமான தொந்திரை யுண்டாக்கவில்லை. மேல் தோலில் மட்டும் சொல்ப காயம்பட்டு கொஞ்சம் இரத்தம் கசிந்ததேயன்றி அதிகமான காயம் படவில்லை. அக்காயத் தால் பின்னுல் முகத்தில் வடு ஏற்படுமென்ற பயம் சற்று மில்லை.

---

# 22 - வது அத்தியாயம்.

நேயர்களே! பெரிய நகரங்களில் மிக்க பணக்காரர்களும், பிரபுக்களும், கற்றோர்களும், கவிவாணர்களும், அறிவாளிகளும்,ஞானவான்களும்,மாடமாளிகைகள் அழகிய கட்டிடங்கள் முதலியன நிறைந்த அழகிய மாட வீதிகளும் இருப்பது இயற்கை. அவ்வாறே ஏழைகளும், பரம ஏழைகளும், யாசகர்களும், சிறுவர்களிலும் வயது முதிர்ந்தோர்களிலும் ஆணிலும் பெண்ணிலும் சில்லரைக் கள்ளர்களும், கன்னம் வைத்துக் கொள்ளை யடிப்போரும், வழி பறிப்போரும், மிக்க சாமார்த்தியவான்களாகிய இராஜத் திருடர்களும், முரடர்களும், எத்தகைய கொடிய மாபாதகங்களுக்கும் அஞ்சாத கொலை பாதகர்களும், கள்ளச் சொத்துகளை வாங்கும் கள்ளர்களும், எவ்வகைப்பட்ட துஷ்டர்களுக்கும், பாழடைந்த வீடுகளும், மனிதர் கால் வைப்பதற்கும் தகுதியற்ற வாசஸ்தலங்களும், குப்பை மேடுகளும் படுகுழிகளும் நிறைந்த வீதிகளும் உண்டு.

ஆனால் எத்தகைய முரட்டுத்தனமும் தந்திரசாமார்த்தியங்களுமுடைய கள்ளர்களைப் பிடிக்கக்கூடிய அபூர்வ சாமார்த்தியம் வாய்ந்த ஆசாமிகளும் அங்குண்டு.

இரத்தினபுரியில் பின்னால் கூறப்பட்ட அவலக்ஷணங்களையுடைய ஒரு ஸ்தலத்தைப்பற்றியே இப்போது நாம் கவனிக்கவேண்டி யிருக்கிறது. அந்த விடத்திற்கு ஜாடித்தீவு என்று பெயர். அது இரத்னபுரியின் ஓரத்தில் கிழக்குப் பாகத்தி லிருக்கிறது. அதைச்சுற்றி சுமார் 30 அடி அகலமுடைய ஒரு அகழி யிருக்கிறது. அதனாலேதான் அதற்குத் தீ வென்று பெயர். அதற்குச் சமீபத்தில் ஆற்றின்

கரைமேல் ஜாடிகள் செய்யும் ஒரு தொழிற்சாலை புராதன காலமுதல் இருந்து வருகிறது. அந்த அகழியில் மிக்க ஆழம் அழுகிய சேரும் ஜலமு மிருக்கும். அதன் ஓரங்களி லுள்ள வீடுகளில் அனேகமானவற்றின் மேற்பாகம் அகழி யின்மேல் வந்திருக்கும். அங்குள்ள அசுத்த ஜலமுழுமையும் அதில் தான் போய் விழுவது. வீட்டிலுள்ளோர் கழித்து விடும் பதார்த்தங்கள் முதலியயாவும் அதில்தான் அழுகிக் கொண்டு கொடிய துர்க்கந்தம் வீசிக்கொண்டிருக்கும்.

சமீபத்தில் இருக்கும் ஆற்றிலிருந்து ஒரு கால்வாய் இந்த அகழிக்கு வருகிறது. ஆயினும் ஆற்று ஜலம் அடிக் கடி போதுமான அளவு இதில் விடப்படுவதில்லை. ஏனெ னில் அதன் கரைமேல் சில தொழிற்சாலைக ளிருக்கின்றன. கால்வாய்ச் சலம் அவைகளுக்கு அதிகமாய் உபயோக மாகிறது. எப்போதாவது கொஞ்சம் விடப்பட்டாலும் அகழியின் அசுத்தத்தைப் போக்க அது போதாது. மேலும் அகழி ஆற்றுமட்டத்திற்கு அதிக பள்ளத்தி லிருப் பதால் அகழியிலுள்ள ஆழமான சேற்றை யடியோடு அடித் துக்கொண்டு போக முடியாது.

அந்தோ அத்தகைய அசுத்தமான அகழியிலுள்ள ஜலத்தையே ஜாடித்தீவிலுள்ள ஜனங்கள் குடிப்பது. அந்த ஜலமே அவர்கள் தேகங்களையும் உடைகளையும் பாத்திரங்களை யும் சுத்தம் செய்வது. அதுவே அவர்கள் ஆகாரங்களைப் பக்குவம் செய்வது. அங்குள்ள வீடுகள் விசேஷமாய் ஒரு அடுக்கு மாடிகளே யுடையது. கீழ்க்கட்டு பெரும்பாலும் பூமியின் கீழாகவேயிருக்கும். அங்குள்ள வீதிகள் மிக்க நெருக்கமானவை. அகழியோரமாயிருக்கும் வீடுகளின்மேல் மாடிகள் பெரும்பாலும் அகழியின்மேல் முன்னோக்கி வந் திருக்கும். அங்கு விற்கப்படும் சாமான்கள், தின்பண்டங்கள்

முதலிய யாவும் மிக்க ஏழைகள் வாங்கக்கூடிய தாழ்ந்தவை களாகவே யிருக்கும். ஆயினும் அத்தகைய சிறு கடைகள் அனேகம் அங்குண்டு.

அவ்வீதிகளில் எங்கு பார்த்தாலும் குப்பையும் அசுத்தங்களும் நிறைந்து, உதவாமல் வீசிவிடப்பட்ட தின்பண்டங்கள் காய்கனி முதலியவைகள் அழுகித் துர்க்கந்தம் வீசிக்கொண்டும் கிடக்கும். அங்குள்ள ஜனங்களோ மிக்க கீழ்த்தரமானவர்களாகவும், கந்தல் உடைகளைபணிந்த ஏழைகளாகவும், நோயாளிகளாகவும், வியாதியாலும் துர்நடக்கைகளாலும் மெலிந்துபோன தேகிகளாகவும் காணப்படுவார்கள்.

ஆனல் அந்நகரத்திலுள்ள கள்ளர்களில் முதல்தரமானவர்களும் பரமதுஷ்டர்களான மூடர்களும், எதற்கு மஞ்சாது பஞ்சமாபாதகங்களைச்செய்யும் கொலையாளிகளும் அந்த விடத்தைத்தான் தங்கள் அடைக்கல ஸ்தானமாகவும் வாசஸ்தலமாகவும் கொள்வார்கள். அத்தகையோர் வசிக்கும் அபாயகாமான விடங்கள் அந்நகரில் ஏழெட்டு விடங்கள் இருந்தாலும் ஜாடித்தீவே அவற்றிற் கெல்லாம் முதன்மையாளது. சாதாரணமாகப் போலீஸாருக்கே அங்கு செல்வதென்றல் நடுக்கந்தான். எத்தகைய கொலைகளையும் களவு முதலிய குற்றங்களையும் செய்ய அது மிக்கத் தகுதியான விடம். அவைகளைச்செய்ய மறைவான விடங்களை யுடைய வீடுகள் அனேகம் அங்குண்டு. அங்குள்ள அகழியிலிருக்கும் ஆழமான சேற்றில் சுலபமாய்க் கொலைக்கு அத்தாக்ஷியானவைகளை மறைத்து விடலாம். சற்று காணயமான உடையும், மோதிரம் கெடியாரம் கொலுசு முதலியவைகளையும் அணிந்து கொண்டிருக்கும் ஒரு மனிதன் தெரி

யாமல் பட்டப்பகலில் அங்கு சென்று விட்டாலும் அந்த விடத்தைக் கண்டதும் நடுங்கிப்போய் வந்த வழியே வோட்டமெடுத்து அந்த எல்லையைக் கடந்தபின்பே "அப்பா எமனிட மகப்படாமல் தப்பித்துக்கொண்டோம்" என்று பெருமூச்சு விடுவான்.

நேயர்களே! வரதநாயகிச் சீமாட்டியின் மாளிகையில் விருந்தும் வேடிக்கைகளும் நடந்ததும், கோமளவல்லி சுகானந்தனிடம் சிக்கிக்கொண்டு கல்லறைக்குள் பதுங்கியிருந்து கடைசியில் தப்பி வீடுவந்து சேர்ந்ததும் இவையாவும் நடந்தது புதன்கிழமை யிரவென்பதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்களென்று கருதுகிறோம். அதே புதன்கிழமை யிரவு சுமார் ஒருமணிக்கு, ஜாடித்தீவை நோக்கி யொரு மனிதன் சென்றுகொண் டிருக்கிறான்.

அவன் யாரெனில் நான்கு சகோதரிகளின் தாயாகிய மரகதவல்லி மூதாட்டியிட மிருக்கும் வேலைக்காரனாகிய சாரங்கன் என்பவனுக்குக் கள்ளச்சாவி செய்து கொடுத்த சாணைக்காரனே. இப்போதும் அவன் கறுப்புக்கறைகளை யுடைய மாசுபடிந்த உடைகளையே யணிந்து கொண்டிருக்கிறான். ஆனால் அவன்கூட விருந்த சக்கிரங்கள் பூட்டப்பட்ட சாணைக்கருவி மட்டும் இப்போதில்லை.

அவன் ஜாடித்தீவிற்குள் நுழையும் சிறு சந்தின் வழியாய் நுழைந்து அகழியைத்தாண்டப் போட்டிருக்கும் ஒரு பழைய மரப்பாலத்தின் வழியாய்ச்சென்று தனக்கு வலப்பக்கமிருக்கும் க்ட்டிடங்களை நோக்கினன். அக்கட்டிடங்கள் அடுத்தவீதியில் தெருவாசற்படிகளை யுடையவைகள். இவன் பக்கமிருப்பவை அவ்வாடையிலுள்ள வீடுகளின் பின் பக்கம். அவ்வீடுகள் சற்று அதிக உயரமுள்ள மனிதனையின் குனிந்தே உள்ள யுலவவேண்டிய அவ்வளவு தாழ்ந்தவைகள்.

நிலவு பூராய்க் காய்ந்துகொண்டிருக்கிறது. சாணேக்கார னுக்கு அந்த விடங்களெல்லாம் நன்ருய்த் தெரியும். அவன் கண்களால் யாவும் பார்த்துக்கொண் டிருந்தாலும், அவனு டைய செவிகள் எங்கோ சத்தமுண்டாகிறதாவென்று உற் றுக் கேட்டுக்கொண்டும் அவன் நாட்டம் வலது பக்கமிருக் கும் கட்டிடங்களின் மேலுமாய் இருந்தன.

சற்று நேரத்திற்குள் அத்திக்கிலிருந்து சிரிப்பும் கேளிக் கையுமான கோஷ்டமும் பாட்டின் சத்தமும் அவன் செவி களில் கேட்டது. அச்சத்தம் பூமியின்கீழிருக்கும் அறை களிலிருந்து வந்ததால் வேறு யாராவதாயிருந்தால் அச்சத் தம் நெடுந்தூரத்திலிருந்து வருவதாகவே நினைப்பார்கள். சாணேக்காரனுக்கு யாவும் தெரியுமாதலால் தான் நிற்கு மிடத்திற்கு நேராயிருக்கும் வீட்டிலிருந்து அச்சத்தம் வரு கிறதென்று அறிந்துகொண்டான் அவ்வீட்டின் தெரு வாசற்படி பக்கத்துவீதியி லிருக்கிறது. அதற்கு சாலைத் தெருவென்று பெயர். அந்த வீட்டிற்கு இருட்டுக் கூண் டென்ற பெயர்.

அதில் பக்கிரி பொன்னன் என்ற ஒருவன் அதில் ஒரு ஹோட்டல் வைத்துக்கொண் டிருந்தான். அவன் பிரக்யாதி பெற்ற கள்ளர்களில் ஒருவன். அந்த விடமும் பிரக்யாதி பெற்ற கள்ளர்கள் கூடு மிடங்களில் முதல்தரமானவற்றில் ஒன்று.

சாணேக்காரன் அங்கிருந்துவந்த சத்தத்தைக் கேட்ட தும், "ஆ! பட்சிகளெல்லாம் கும்பாய்க் கூடி யிருக்கின் றன. நாம் உத்தேசித்தது சரியே" என்று தனக்குத் தானே கூறிக்கொண்டான். சிந்தித்துக்கொண்டே வந்த வழியே திரும்பிச் சென்று மறுபடி அகழியின்மேலுள்ள

பாலத்தைத் தாண்டி சாலைத் தெருவில் நுழைந்து சென்று தான் கவனித்திருந்த வீட்டின் கதவைத் தட்டினன்.

சற்றுநேரங் கழித்து யாரங்கேயென்று ஒரு முரட்டுச் சத்தம் கேட்டது. சாணைக்காரன் "சாணைக்காரனுகிய சுந்தரம்" என்றான்.

அதற்குப் பதில் "நீ யாரோ எனக்குத் தெரியாது. என்ன வேலையாய் இங்குவந்தாய்?" என்று உள்ளிருப்பவன் கேட்டான்.

சாணைக்காரன்:—"நான் கிழநரியிடம் ஒரு இரகசிய சங்கதி பேசவேண்டும்; அவன் இங்கிருக்கிறதாய்க் கேள்விப்பட்டு வந்தேன். இவ்வளவே சங்கதி" என்றான்.

உள்ளிருப்பவன் சரி சற்றிரு என்று கூறிவிட்டு உள்ளே சென்றான். சற்றுநேரங் கழித்து அம்மனிதன் கையில் ஒரு தீபத்தோடுவந்து கதவைத் திறந்தான்.

சாணைக்காரன் உடனே உள்ளே நுழைந்து தன் எதிரில் தோன்றும் தீட்சணியமான குரூரமுகமுடைய அம்மனிதனை நோக்கி, "ஒகோ பக்கிரி பொன்னன்! க்ஷேமந்தானு?" என்றான்.

பக்கிரி பொன்னன் கதவை மூடித் தாளிட்டுச் சங்கிலி போட்டு பூட்டிக்கொண்டு அங்கேயே நின்று சாணைக்காரனை யுற்றுப் பார்த்துக்கொண்டே "நீ யெனக்குத் தெரியவேயில்லை. என்னை யெங்கு கண்டாய்?" என்றான்.

சாணைக்:—"அடடா! உன்னைப்போன்ற பிரக்கியாதிபெற்ற மனிதன் என்போன்ற அற்பனுக்குத் தெரியாம லிருக்குமோ? ஏன் நான் உன்னை கறிக்கந்தனுடைய குகை வீடு, மேட்டுத் தெருவிலிருக்கும் பேயாண்டியின் மடம், சீனுக்காரன் சௌக்கியசாலை, சேனைத் தெருவி

விருக்கும் சொக்கன் ஆனந்தமடம் முதலிய நம்மவர்கள் கூடும் இடங்களிலெல்லாம் உன்னைப் பார்த்திருக்கிறேன்" என்றான்.

பக்:—அப்படியா! இருக்கலாம். நம்மவர்கள் வசிக்குமிடமனைத்தும் உனக்குத் தெரிந்திருக்கின்றன. ஆனால் போலீஸ் நாய்களுக்குக்கூட இந்த விடங்களனைத்தும் தெரியும்.

சாணைக்:—ஆனால் போலீஸ் நாய்கள் இத்தகைய இரவில் துணிகரமாய் பக்கிரிப் பொன்னனுடைய இருட்டுக் கூண்டிற்கு வரா.

பக்கிரிப் பொன்னன் சட்டென்று கொடுக்கப்பட்ட இந்த விடையைக் கேட்டதும் சற்று நம்பகமும் திருப்தியுமடைந்து, "ஆம். உண்மையே. எந்தத் துப்பறிபவனாவது, கள்ளரைப் பிடிப்பவனாவது இங்குவந்தால் அவன் மறுபடி இதைவிட்டு உயிரோடு திரும்பிப்போக முடியாது. அவன் கள்ளரைப் பிடிப்பதில் பிரசித்திபெற்ற செல்வநாதன் என்பவனாயினும் சரி. ஒரு கத்தியும் அவன் கழுத்தும் மேல்மாடிச் சாளரமும் பின்னாலிருக்கும். இதுவே அத்தகைய நாய்கள் ஒழியவேண்டிய வழி. கள்ள நாடோடிப்பயல்கள்" என்றான்.

சாணைக்காரன் சந்தோஷத்தோடு, "கபுர் நீ கூறியதே சரி. உண்மைச் சங்கதி யென்னவெனில் அச்செல்வநாதன் என்ற பயலே ஒரு காரியத்திற்காக என்னைப் பிடிக்கத் துசங் கட்டிக்கொண் டிருக்கிறான். ஆனால் அவன் கையில் நான் சிக்குமுன்பே அவன் தேகத்தில் இரண்டு மூன் றங்குலம் என் ஈட்டியை யேத்தாவிட்டால் நான் அந்தப் பயலுக்கே பிறந்தவனாவேன்" என்றான்.

நேயர்களே துப்பறியும் சிங்கமாகிய செல்வநாதனைப் பற்றி இத்தகைய பிரதிக்னை செய்துகொண்ட சாணைக் காரனாகிய சுந்தரம் என்பவன்மேல் சற்று கண்ணோக்கம் வைத்திருக்கும்படி யுங்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் மிக்க தீரமும், தந்திரமும், சாமர்த்தியமும், வல்லமையும், புத்தி சூக்குமமுடைய துப்பறியும் சிங்கமாகிய செல்வநாதன்மேல் அவ்வளவு தைரியமாய் பிரதிக்னைசெய்து கொண்ட இம்மனிதன் யாரென்று நாம் முடிவில் பூரணமாயறிய வேண்டியதே.

பக்கிரி மேற்கண்ட சாணைக்காரன் வார்த்தைகளைக் கேட்டதே யவனிடத்தில் சந்தேகம் நீங்கி நம்பகமுண்டாகி, சற்று சினேகபாவமாகவே யவனை நோக்கி, "பேஷ் இதுதான் புருஷத்தனமான வார்த்தைகள்; நான் முதலில் உன்மேல் கொஞ்சம் ஐயப்பட்டதற்கு என்னை மன்னிக்கவேண்டும். இந்தப் போலீஸ் நாய்கள் மிக்க தந்திரமான வழிகளிலெல்லாம் வருகிறார்கள்" என்றான்.

சாணைக்:—"இன்னும் அதைப்பற்றி ஒரு வார்த்தைகூடக் கூறவேண்டாம். என்னைப்பற்றி நீ யின்னும் கொஞ்சம் அறிந்தால் நாமிருவரும் நெருங்கிய மனமொத்த நண்பராய் விடுவோம் என்பது நிச்சயம். கடவுள் தயவால் இங்கிருந்து பத்துமைல் வட்டத்திற்குள் வசிக்கும், செல்வந்தர்கள், பிரபுக்கள், பெரியமனிதர்கள் முதலியவர்களுடைய பிரதான சமையற்காரர்கள், வேலைக் காரர்கள் இவர்களில் என்னிடம் சாவி வாங்காதவர்கள் ஒருவருமில்லை" என்று கண்களால் சமிக்கை செய்துகொண்டே கூறினான்.

பக்கிரிப் பொன்னன் கொஞ்ச நஞ்சமிருந்த சந்தேகமும் நீங்கி, "சரி கை கொடு" என்று சினேக பாவமாய்ச்

சாணேக்காரன் கரங்களைப் பிடித்து குலுக்கி, "இனி யுள்ளே வா. நமது நண்பர் கூட்டத்திற்கு உன்னை யறிமுக மாக்கி வைக்கிறேன்" என்று அவனை யுள்ளே யழைத்துச் சென்ருன்.

சாணேக்காரன் அவ்வாறே பக்கிரி பொன்னன் பின்னல் சென்ருன். பக்கிரி வீட்டின் பின் பக்கம் பூமியின் கீழிருக்கும் ஒரு அறைக்கு அழைத்துச் சென்ருன். அங்கு நிறைந்த சுருட்டுப் புகையில் பல ஆடவர்களும் இரண்டு மூன்று மாதர்களும் குடித்துக்கொண்டும் சுருட்டு பிடித்துக்கொண்டுமிருந்தார்கள. இரண்டு தீபங்கள் அங்கு எரிந்து கொண்டிருந்தன.

இவர்களே ஆரவாரம் செய்தவர்கள். அவர்களனைவரும் துர்நடக்கைகளால் தாடை யொட்டிக் கண்கள் குழி விழுந்து விகார சொரூபமுடையர்களா யிருந்தார்கள். பக்கிரி சாணேக்காரனை யவர்களுக்குச் சுட்டிக் காட்டி "நண்பர்களே! இதோ இவர் நம்முடைய புது நண்பர்'' என்ருன். ஒரு சந்தேகமுமின்றி தங்கள் இனத்தைச் சேர்ந்தவன் என்று அறிந்தாலன்றி பக்கிரி யொருவனை யுள்ளே யழைத்துவா மாட்டானென்று அக்கள்ளர்கள் நன்ருயறிவார்கள். ஆகையால் யாவரும் உடனே சந்தோஷ ஆரவாரம் செய்து சாணேக்காரனுக்கு நல்வரவு கூறினர்கள்.

சாணேக்காரன் உடனே தன் மடியிலிருந்து இரண்டு மூன்று ரூபாய்களை யெடுத்து மேஜைமேல் வைத்து பக்கிரியை நோக்கி "நமது நண்பர்களுக்கு சாராயமும் எனக்கொரு சுங்கானும் உயர்ந்த புகையிலையும் கொண்டுவா" என்ருன். பக்கிரி யுடனே யாவும் கொண்டு வந்து மேஜைமேல் வைத்தான்.

சாணைக்காரன் அங்குள்ள யாவரையும் பார்த்து விட்டு பக்கிரியை நோக்கி "கிழநரி யெங்கே? இங்கு காணுமே" என்றுன். அவன் மேல் மாடியிலிருக்கிறுன். நீ வேண்டுமாயின் அதோ அந்த ஏணியின் மேலேறி மேல் தளத்திலிருக்கும் சிறு கதவைத் திறந்து கொண்டு மேலே சென்றல் அவனைக் காணலாம்'' என்றுன்.

சாணைக்காரன் கொஞ்சம் சாராயம் அருந்தி விட்டு உடனேஏணிமேல் ஏறி மேலுள்ள அறைக்குச் சென்றுன். அந்த அறை கறேலென்று எங்கும் புகை படிந்திருந்தது. அங்கு ஒரு பழைய மேஜையும் இரண்டு நாற்காலிகளும் தவிர வேறெவ்வித சாமான்களும் கிடையாது. ஒரு தீபம் மட்டும் எரிந்துகொண்டிருந்தது. ஒரு நாற்காலி மேல் கிழநரி குந்திக்கொண்டிருந்தான். அவனுக்கு வயது எழுபதாயிற்று. வாயில் ஒருபல்லுங்கூடக் கிடையாது. கண்களும் தாடைகளும் குழி விழுந்து முகம் திறைகள் நிறைந்து கோரரூபமாயிருந்தது.

சாணைக்காரன் அந்த அறையில் பிரவேசிக்கு முன் கிழநரி மேஜைமேல் பரப்பி வைக்கப்பட்டிருந்த பொன் கைக்கெடியாரங்கள், பொன் சங்கிலிகள், வெள்ளிச் சங்கிலிகள், மோதிரங்கள், முதலிய சிறிய நகைகள் இவைகளைக் கவனமாய் நோட்டம் பார்த்து ஒவ்வொன்றிற்கும் விலை மதிப்பு குறித்துக்கொண்டிருந்தான். அந்த நகை முதலியவைகள் யாவும் கீழறையிலுள்ள கள்ளர்கள் களவாடிக் கொண்டு வந்தவைகள். கிழநரி கள்ள நகைகள் வாங்குவதில் பிரக்யாதி பெற்றவன். அவன் நகரத்தின் மற்றேர் பாகத்தில் வசித்துக்கொண்டிருப்பவன். கள்ள நகைகளை வாங்குவதற்காக அங்கு வாரத்திற் கொருமுறை வருவது வழக்கம். மேஜைமேலுள்ளவற்றை விலைமதித்துக்கொண் டிருந்தவன்

யாரோ கீழறையிலிருந்து மேலேறிவரும் சத்தத்தைக் கேட்டதே சட்டென்று தன் குட்டையை விரித்து அவற்றின் மேல் மூடிவிட்டான். அவன் பயத்தால் அப்படிச் செய்ய வில்லை. ஏனெனில் கள்ளர் தவிர வேறொருவரும் அங்குவர அனுமதி பெறமாட்டார்களென்று அவன் அறிவான். அவன் எதிலும் எப்பொழுதும் முன் சாக்கிரதையாயிருக்கும் சுபாவப்படி அப்படிச் செய்தான்.

---

## 23 - வது அத்தியாயம்.

சாணைக்காரன் கிழநரியிடம் சென்ற மறு நிமிடம் தெருக் கதவை யாரோ தட்டினார்கள். பக்கிரி பொன்னன் உடனே சென்று "யார் அங்கே?" யென்றான். தட்சணம் "நான்தான் தானப்பன்" என பதில் வந்தது. பக்கிரி யுடனே "ஆ சரி சரி" என்று கதவைத்திறந்து, வந்தவனை யுள்ளே யழைத்துக்கொண்டு பழையபடியே கதவைப் பூட்டிக் கொண்டதும் "ஆ! தானப்பா எப்படி க்ஷேமந்தானே?" என்றான். தானப்பன் "ஆகா, ஒன்றும் குறைவில்லை. நண்பர்கள் கூட்டமுண்டோ?" வென்றான். பக்கிரி "ஆகா, வாவுள்ளே" யென்று அவனைக் கள்ளர் கூடியிருக்கும் அறைக்கு அழைத்துச்சென்றான். கள்ளர் யாவரும் அவனையறிவார்களாதலால் அவனைக் கண்டவுடனே மிக்க பெருமையோடு அவனுக்கு நல்வரவு கூறினார்கள்.

இந்தத் தானப்பன் முன்பு மரகதவல்லி மூதாட்டியின் வேலைக்காரனாகிய சாரங்கனிடம் களவாடும் விஷயமாய்க் கலந்து பேசிய இராஜாங்கக் கொலையாளியே யென்பதை

நேயர்கள் மறந்திருக்க மாட்டீர்களென்று நம்புகிறோம். இவன் மிக்க முரட்டுத்தனமும் குரூரமுமான பார்வையுடையவன்.

அவன் அங்கிருப்பவர்களை யெல்லாம் நோக்கி "நண்பர்களே! நீங்களெல்லாரும் சுகந்தானா?" என்று கேட்டுக்கொண்டே அங்கிருந்த சாராயத்தில் ஒரு கிண்ணம் ஊற்றி ஒரு மொட்டில் குடித்து விட்டான்,

அங்கிருந்த மாதரில் ஒருத்தி அவனை நோக்கி, "எல்லாரும் க்ஷேமமே. கிழநரி மேல்மாடியின்மேல் இருக்கிறான். இன்று அவன் வருகிற வாரமுறை யல்லவா" என்றாள்.

அவன் "நல்லதாயிற்று. நானும் அவனுக்காகவே தீவுக்கு வந்தேன். நான் ஒரு விஷயமாய் அவனைக்கண்டு பேசவேண்டியதா யிருக்கிறது. அவன் மாடிமேலிருக்கிறானா?" என்றான்.

பக்கத்திலிருந்த பக்கிரி பொன்னன் "ஆனால் அவனோடு கூட ஒருமனிதன் பேசிக்கொண் டிருக்கிறான்" என்றான்.

தானப்பன்:— "ஹோ! அப்படியானால் நான் சற்றுநேரம் தாமதிப்பேன். அப்படி யவசரம் ஒன்றும் முழுகிப் போகவில்லை. மேலும் இத்தகைய இனிமையான நண்பர் கூட்டத்தி லிருக்கையில்......" என்று புன்னகையோடு அங்குள்ளவர்களை நோக்கினான்.

பக்கிரி:—"ஆயினும் சாணைக்காரன் அதிகநேரம் இருப்பானென்று நான் கருதவில்லை" என்றான்.

அதைக்கேட்ட தானப்பன் "சாணைக்காரனா?" என்று வியப்போடு கேட்டான். ஏனெனில் தான் சாரங்கனிடம்

பேசியபோது அவன் ஒரு சாணைக்காரனிடம் கள்ளச்சாவி வாங்கியதைக் கூறியது அவன் நினைவிற்கு வந்தது.

பக்கிரி யுடனே மறுபடி சந்தேகமடைந்து, "ஓ! உனக்கு அவனைப்பற்றி யேதேனும் தெரியுமோ?" என்று ஆவலோடு கேட்டான். தானப்பன் "தெரியும். ஆனால் கெடுதியான சங்கதி யொன்றுமில்லை. அவன் நான் நினைக்கிற அதே சாணைக்காரனாயின் அவன் தகுதியான ஆசாமியே. ஆயினும் இந்த ஆள் அவனா யிராதென்று கருதுகிறேன். ஏனெனில் அவனைச் செந்தலைகள் தேடிக்கொண்டிருப்பதால், அவன் இங்கு வந்திருப்பானென்பது எனக்குச் சந்தேகமா யிருக்கிறது" என்றான்.

பக்:—இந்த ஆள் கூட செந்தலைகளால் தேடப்பட்டவனே. அவனே எனக்குக் கூறினான். ஆனால் செல்வநாதன் தன்னைப் பிடிப்பதற்குள் தன் ஈட்டியில் நாலைந்து அங்குலம் அவன் தேகத்தில் நுழைந்துவிடும் என்று கூறினான்.

தான:—ஆ! அப்படியாயின் அவனாகத்தான் இருக்கவேண்டும். அப்படிப்பட்டவன் நமது கூட்டத்திற்கு மிக்க தகுதியானவன். அவன் எதற்காக கிழநரியிடம் வந்திருக்கிறானோ தெரியவில்லை.ஒருசமயம் அவனுக்கு வேலையில் உதவி வேண்டியதா யிருக்கும். தன்னோடு கூட்டாய் வேலைசெய்ய உதவிவேண்டி வந்திருப்பான்.

பக்:—அப்படியானால் நீயும் போய் பக்குவமாய் அவனோடு கலந்து கொள்வதுதானே.

தான:—"ஆம், இதோ போகவே போகிறேன்" என்று கூறிக்கொண்டே ஏணியின்மேல் ஏறினான்.

அவன் ஏணியின் உச்சியில் நின்று மேலிருக்கும் கதவைக் கொஞ்சம் திறந்துபார்த்தான். கிழநரியும் சாணேக்காரனும் மிக்க நெருக்கமாய் உட்கார்ந்து கொண்டு மெதுவாய்ப் பேசிக்கொண் டிருந்தார்கள். இருவர் முகங்களுக்கும் மத்தியில் மூன்று நான்கு அங்குல இடை வெளிகூட இல்லை. அவர்கள் இருவரும் ஏதோ விஷயமாய்க் கவனத்தோடு பேசிக்கொண்டே யிருக்கிறார்களென்று தானப்பன் தெரிந்து கொண்டான்.

ஆகையால் கதவைத்திறந்து "உள்ளே வரலாமா?" என்றான்.

கிழநரி:—ஆ! ஆ! திடீலென்று என்னைத் திடுக்கிடச் செய்து விட்டாய். ஓ என் அன்பார்ந்த நண்பனே! மேலே வா. இச்சமயம் உன்னையே சிந்தித்துக்கொண் டிருக்கிறேன். நீ நல்ல சமயத்தில் வந்தாய். இப்போது தான் நமது புது நண்பரிடம் உன்னைப்பற்றி எவ்வளவு அன்போடு கூறினேனென்று கேள்.

தானப்பன் உடனே மேலேறி அறைக்குட்சென்று "சாணேக்கார சுந்தரம் என்று தெரிந்துகொண்டேன். கீழறையில் நீ இங்கு பேசிக்கொண்டிருப்பதாய்க் கூறினார்கள். ஆனால் இதுவரை யுன்னைக்காணும் பாக்கியம் பெறுவிட்டாலும், உன்னைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன்" என்று சாணேக்காரனை நோக்கிக் கூறினான்.

சாணே:—"என்னைப்பற்றிக் கேள்விப்பட்டாயா? நான் இன்னும் நாட்டில் அவ்வளவு பிரக்யாதி யடையவில்லையே" என்றான்.

தான:—"நேற்று இரவு நீ ஒருவிடத்தில் சாரங்கன் என்ற ஒருவனைச் சந்திக்க வில்லையா? அவன் என் நண்பன்.

நீ என்னிடம் பேசச் சற்றும் தடுமாற்றமுற வேண்டாம். நான் சரியான மனிதன் என்று ஏகாம்பரம் பிள்ளை கூறுவார்'' என்றான்.

ஏகாம்பரம் என்பது கிழநரியின் சாதாரணப் பெயர்.

சாணைக்காரன், “இவர் முன்னமே யுன்னைப்பற்றி திருப்தியாய் என்னிடம் கூறியிருக்கிறார். ஆகையால் நான் உன்னிடம் தடுமாற்றத்தோடு பேசவேண்டிய அவசியமில்லை. நீ கூறியபடி நான் நேற்றிரவு சாரங்கனைக் கண்டது உண்மையே'' யென்றான்.

தான:—“சரி அவ்வளவே வேண்டியது. கை கொடு'' என்றான்.

உடனே இருவரும் சினேகமாய்விட்ட அறிகுறியாகக் கைகுலுக்கிக் கொண்டார்கள்.

கிழநரி:—“ஆகாகா: பார்த்தாயா சுந்தரம்: நாங்கள் எப்போதும் சந்தோஷமாயிருக்கும் நண்பர் கூட்டம். தானப்பன் என் அருமையான நண்பன். நான் அவனை என் அருமைப் புதல்வன்போல் மிக்க அன்போடு நேசிக்கிறேன். அவனும் நான் இங்குள்ள ஏழைகளுக்கு—பாபம்! பிழைக்க என் உதவி அவசியம் வேண்டியவர்கள் அவர்களுக்கு—ஒரு தந்தையைப் போன்றவன் என்று கூறுவான்'' என்று மிக்க இரக்கமும் அன்பும் உடையவன்போலவே கூறினான்.

தானப்பன் வெறுப்போடு “கிழநரியே! உன் ஊத்தை வாயை மூடு. நீ யெம்மாதிரி ஆசாமியென்று சுந்தரம் முன்னமே யறிவான். இன்றேல் உன்னைத் தேடிக்கொண்டு பக்கிரி பொன்னனுடைய இருட்டறைக்கு வந்திருக்கமாட்டான்'' என்றான்.

கிழநரி:—"இல்லே யில்லே. நமது நண்பருக்கு என்னேப்பற்றி நன்ருய்த் தெரியாது. இவர் என்னேப்பற்றி இன்னும் நன்ரு யறியவேண்டுமென்பதே என் கோரிக்கை. ஓ! என் அன்பார்ந்த நேசனுகிய தானப்பா நமது சாணேக் கார சுந்தரத்திற்கு நீ என்னேப்பற்றிய உண்மையைக் கூறு. அதாவது நான் மிக்க நெறியுள்ளவன். வழி பறிக்கொள்ளே, கன்னக்களவு, முடிச்சவிழ்த்தல் முத லிய களவாடிகளிடம் எள்ளளவும் சம்பந்தம் வைத் துக் கொள்கிறவனல்ல. மிக்க நேர்மையான வழியில் நடப்பவன். கடவுளுக்குப் பயந்து நடப்பவன். அனேக தரும கைங்கரியங்களுக்கு உதவி செய்பவன். அடக்க மாகவே ஏராளமான சில்லரைத் தருமங்களேச் செய் பவன்" என்ருன்.

தானப்பன் "ஆம் ஆம். சந்தேகமே யில்லே. உன் கைங் கரியங்களெல்லாம் மிக்க அடக்கமானவைகளே யென்று நான் நிச்சயமாய்க் கூறுவேன்" என்று கூறிவிட்டு, சாணேக் காரனே நோக்கி, "இந்த ஆசாமியைப்போல் கபடும் நய வஞ் சகமும், முகஸ்துதியும், ஆளேத் தட்டிக்கொடுக்கும் சாமார்த் தியமும், கெஞ்சிப் பேசும் தந்திரமும் உடையவனே நீ யிது வரையில் கண்டிருக்கவேமாட்டாய். இவன் தான் வாலாய மாய்க் கள்ளச் சாமான்களே வாங்கும் கள்ளனல்லவென் றும், ஏழைகள் குப்பைமேடுகளிலும், சாலகங்களிலும் வீதி களிலும் இருந்து கண்டெடுத்துக்கொண்டு வரும் அற்ப சாமான்களுக்குச் சரியான விலே கொடுத்து அவர்களுக்குப் பேருதவிசெய்தும் புண்ணியாத்மாவென்றும் நாமெல்லாம் நம்பும்படிச்செய்ய அடிக்கடி முயற்சி செய்துக்கொண் டிருப்பது இவனுடைய சுபாவம். நீ ஆயிரம் ரூபாய் பெறும் படியான வெள்ளிச் சாமான்களேக் கொண்டுவந்து கொடுத்

தாலும் அவை களவாடப்பட்டவையென்று சற்றேனும் சந்தேகிக்காதவன் போலவே, 'பாபம் எந்தப் பெரிய மனிதன் இக்கட்டில் சிக்கிக்கொண்டு இவற்றை விற்றுவரும்படி யுன்னிடம் கொடுத்தனுப்பினான்' என்று கேட்பான். ஏன், என்னைக்கூட பரமயோக்கிய னென்றேதான் கருதியிருப்பது போலவே அபிநயம் செய்வான்" என்றான்.

கிழநரி:—"ஆம். உண்மையே; உண்மையே. போக்கிரிகள், நாடோடிகள், கள்ளர்கள் இத்தகையோரிடம் நான் ஒரு சம்பந்தமும் வைத்துக்கொள்வதில்லை. ஏனெனில் போலீஸார் என்னைத் தேடி வரும்படி வைத்துக் கொள்ள எனக்குப் பிரியமில்லை. நேர்வழியிலும் நியாயமாகவும் இருக்கிற விஷயங்கள் தவிர மற்றவைகளை நான் எடுத்துப் பார்ப்பதேயில்லை. ஒருவருடைய மர்மங்களை நான் அறிய முயல்வதில்லை. கிழநரியில் இருக்கும் ஆட்களெல்லாம் மிக்க பரிதாபமான ஏழைகள். அவர்கள் குப்பை மேடுகளிலும் வீதிகளிலும் சாலகங்களிலும் தேடிப் பார்த்து அகப்படும் அற்பப் பொருள்களைக் கொண்டுவந்து என்னிடம் விற்று ஜீவிப்பவர்கள்" என்று நமது சாணைக்கார சுந்தரத்தைப் பார்த்துக் கூறினான்.

தான:—"ஆம் ஆம். அவர்கள் மிக்க அற்பமான பொருள்களைத் தான் கண்டெடுத்து வருவது. எப்படிப்பட்டவையெனில், பொன் கெடியாரங்கள், பொன் சங்கிலிகள், நவரத்தினங்க ளிழைத்த மோதிரங்கள், பொத்தான்கள், இன்னும் பலவித அழகிய ஆபரணங்கள் முதலியவைகளே. அவைகள் இந்நகரில் மிக்க அதிகம். ஆனால் உண்மையில் அவைகள் வீதிகளிலும், குப்பை மேடுகளிலும் சாலகங்களிலும் அகப்படுவ

தில்லை. செல்வவந்தர்கள் பெரிய மனிதர்கள், சீமாட்டிகள் முதலியவர்களுடையஜேபிகளிலும், விரல்களிலும், கழுத்துகளிலும் இருந்தே அவைகள் அகப்படுபவைகள்'' என்று ஒருவித வெறுப்பான குறுநகையோடு கூறினன்.

கிழநரி:—இருக்கலாம் இருக்கலாம். சுந்தரம்! நான் கூறுவதை நன்ருய்க் கவனத்தில் வைத்துக்கொள். நான் அயோக்கியர் கள்ளர் முதலியவர்களோடு ஒரு சகவாசமும் வைத்துக்கொள்கிறவனல்ல. நான் கொஞ்சம் பிரக்யாதிபெற்ற மனிதன்; நியாயமான வழியில் கொடுக்கல் வாங்கல் செய்பவன். எப்போதாவது நமது உத்தமனுன பக்கிரி பொன்னனுடைய மிக்க மரியாதையான ஹோட்டலுக்கு வராமலிருக்க முடியவில்லை......''

தான:—வாரத்திற் கொருமுறை தவிராது......

கிழ:—''பார் பார் எப்போதும் கேலியும் வேடிக்கையுமே. மிக்க உல்லாசமானவன். அதனுற்றுன் நான் என் புத்திரன்போல் நேசிக்கிறேன்'' என்று சுந்தரத்தை நோக்கிக் கூறினன்.

தான:—அட கபடமும், சூதும், முகஸ்துதியுமுடைய கிழப்பயலே! பிராம்மணன் எப்படி மாமிசத்தை வெறுப்பானே அதிலும் அதிகமாய் நீ யென்னை வெறுப்பது உன் மனதிற்கு நன்ருய்த் தெரியும். ஆனல் காரியவசமாய் நீ என்னிடம் சினேகன்போல் நடிக்கவேண்டியதா யிருக்கிறது. நானும் அப்படியே துரதிர்ஷ்டவசத்தால் உன் நட்பு வேண்டியவனு யிருக்கிறேன். ஆயினும் நீ இந்த நயவஞ்சக கபடத்தனத்தை விட்டொழித்து உள்ளதைப் பேசுவாயாயின் நலம் என்

பது என் விருப்பம். நீயேது இச்சென்மத்தில் இதை விடப்போகிறதில்லே. நானும் எத்தனேயோ வருடங்களாய் உன்னேடு பழகி வருகிறேன். நீ யப்படியே யிருக்கிருய்.

கிழ:—நீயும் யப்படியே சதா அதே கேலியும் வேடிக்கையும் சிரித்த முகமுமுடையவனுகவே யிருக்கிருய். அதோடு மிக்க நல்ல சுபாவ முடையவன்.

தான:—ஆம் ஆம். மிக்க நல்ல சுபாவ முடையவன். ஏனெனில் இன்னும் உன் மண்டையைப் பிளந்துவிடாமல் விட்டுவைத்திருக்கிறேன்.

கிழங்ரி:—அப்படி நீ யொருபோதும் செய்யமாட்டாய்; ஏனெனில் எனக்கொரு கெடுதி நேரிட்டுவிட்டால் இங்குள்ள ஏழைகளுக்கு யார் உதவிசெய்வது. உனக்கே வழியில் ஒரு பொன் கெடியாரம் அகப்பட்டது. அல்லது யாராவது பெரிய மனிதர் ஆபத்தில் ஏதாவது வெள்ளிச் சாமான்களைக் கொடுத்து உன்னே விற்றுவரச் சொன்னுல் என்ன செய்வாய்?

தான:—ஓ! கிழக்கள்ளனே. உன் வஞ்சகப் பிரசங்கத்தை யித்தோடு நிறுத்து. இன்னமும் அதிகப் பிரசங்கம் செய்துகொண் டிருந்தால் எனக்கு வெறிகொண்டு விடும்.

கிழங்ரி:—கோபம் வேண்டாம். நான் சொல்வதெல்லாம் கூடி நமது புது நண்பனுகிய சுந்தரம் என்னேப்பற்றிய உண்மையை நன்ருய்.......

தான:—"ஆம்ஆம். உன்னேப்பற்றிய உண்மையை நான் எவ்வளவு அறிந்திருக்கிறேனே அவ்வளவு நமது நண்பனும் முன்னரே அறிந்துகொண் டிருப்பான். நீ கள

வாடப்பட்ட பொருள்களை வாங்குவதில் முதல்தர மானவனென்றும், நயவஞ்சகத்திலும், கபடு, சூது, தந்திரம் முகஸ்துதி முதலியவற்றிலும் இணையற்றவ னென்றும் முன்னமே நமது புது நண்பன் உணர்ந்து கொண் டிருப்பான். ஆகையால் இதுவரையில் நடந்த கபடவஞ்சகத்தை இதோடு நிறுத்திவிட்டு அவசிய மான விவகாரத்தைப்பற்றிப் பேசுவோம். முதலாவது, உங்களுக்குள் பேசவேண்டிய விவகார மிருந்தால். நான் இங்கிருக்கலாகுமா அல்லது கீழேபோய் இருக்க லாமோ ?" என்றான்.

கிழ:— "ஓ வேண்டாம், வேண்டாம்; நீ போகவேண்டாம்" என்றான்.

தானப்:— சரி சரி இருக்கிறேன். நீ யேன் யென்னை யெதிர் பார்த்தாய்? சற்று முன் இந்நண்பரிடம் என்னைப் பற்றி என் பிரஸ்தாபித்தாய் அதைக் கூறு.

கிழநரி:— இந்த நண்பர் என்னைப்பற்றி கேள்விப்பட்டு இங்கு வந்தார். அடுத்தவாரம் இவர் ஏதோ சில சாமான்களை விற்கவேண்டி யிருப்பதாகவும், தான் காலையிலேயே நகரத்தைவிட்டுச் செல்லவேண்டி யிருப்பதால் இப் போதே என்னைக்கண்டு பேசவேண்டி வந்ததாகவும் கூறினர். அல்லவா சுந்தரம்?

சாணக்:— ஆம் உண்மையே. நான் சங்கதிகளைக் கூறிய போது நீ உனக்கு உதவிவேண்டுமாயின் எனக்குத் தெரிந்த தகுதியான நண்பன் ஒருவன் இருக்கிறான் என்று இந்த நண்பனைப்பற்றி மிக்க நல்ல அபிப்பிரா யம் கூறிக்கொண் டிருந்தாய். அப்போது தான் இவ ரும் வந்தார்.

கிழநரி தானப்பனை நோக்கி, "நமது நண்பர் அச் சாமான்களை யெடுத்துவரத் தனக்கு ஒரு உதவி வேண்டு மென்று கூறினதால் நான் உன்னைப்பற்றிக் கூறினேன்" என்றான்.

தானப்பன் உடனே சுந்தரத்தின் கரத்தைப் பிடித்துக் கொண்டு "நண்பனே உண்மையாகவே ஏதாவது வேட்டை யிருக்கிறதோ! உனக்கு அதற்குத்துணையாய் ஆள் வேண்டு மோ?" என்றான்.

கிழ:— "நண்பர்களே உங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எனக்கு முன் பேசாதீர்கள். நீங்கள் எங்காவது சென்று பேசிக்கொள்ளுங்கள்" என்றான்.

தானப்பன் வெறுப்பான நகையோடு கிழநரியைநோக்கி "எங்கள் சம்பாஷணையைப் பற்றி நீ கவனிக்கவேண்டாம். பிறகு நான் உன்னிடம் ஒரு விசேஷ சமாசாரம் கூறவேண் டும். அதைக்கேட்டதே யுன் பல்லில்லா வாயில் ஜலம் ஊற்று போல் சுரக்கும்" என்று கூறிவிட்டு, சுந்தரத்தை யழைத்துக் கொண்டு சற்று எட்டச்சென்று கீழ்க்கண்டபடி கூறினான்.

"நண்பனே! நான் இரண்டொரு பேச்சுக்காரன். சூது, தந்திரம், நயவஞ்சகம், முகஸ்துதி இத்தகைய பேச்சுகள் எனக்குச் சற்றும் பிடிக்காது. அப்படிப்பட்ட ஆசாமிகள் மேல் எனக்குக் கெட்ட வெறுப்பே. மனதிலிருப்பதைக் களங்கமின்றி பேசவேண்டும். பேசியபடி நடக்கவேண்டும். ஏமாற்றுவது, சமயத்திற்குத் தக்கபடி தாளம்போடுவது, மூடிவைத்துக் கழுத்தறுப்பது, நம்பவைத்து நட்டாற்றில் விடுவது இத்தகைய விஷயங்கள் என்னிடம் உதவவே உத வாது. நான் உன்னைக்கண்டதே உன் பார்வையாலேயே உன் விஷயத்தில் திருப்தியடைந்தேன். அதோடு உன்னைப் பற்றி நான்கேள்விப்பட்டவரையில் நீ சரியான ஆசாமியென்

பதே என்மதிப்பு. ஆகையால் இரண்டே வார்த்தைகள் கூறு கிறேன். உன்னிடம் கிராக்கியிருந்து உனக்குத் துணைவேண்டுமாயின் நான் உன் உறுதியான நண்பனுயுதவ ஆயத்தமாயிருக்கிறேன். அவ்வளவே என்சங்கதி" என்ருன்.

சாணே:— இருக்கிற உண்மையான விஷயம் என்னவென்ருல் சற்று தூரத்திலுள்ள நாட்டில் ஒருவிடத்தில் பயமில்லாமல் சுலபமாய் செய்யக்கூடிய ஒருவேலை இருக்கிறது......

தான:— அதென்ன உடைப்பா, வழிவேலையா........

சாணே:— இல்லையில்லை சவாரி வண்டிவேலை. (உடைப்பென்ருல் இரவில் வீட்டின் பூட்டு முதலியவற்றை யுடைத்து உள்ளே நுழைந்து களவாடுதல்— வழி வேலையென்ருல் இரவில் பிரயாணிகளை வழி மறித்துக் கொள்ளையடித்தல் — சவாரி வண்டிவேலை யென்றது வண்டியிலேறிச்செல்லும் ஆட்களை வழிமடக்கிக் கொள்ளையடிப்பது, இது கள்ளருடைய இரகசியபாஷை) நாம் கையாடவேண்டிய ஆள் ஒருபெரிய மனிதன். இப்போதவன் இந்த நகரத்தில்தா னிருக்கிருன். அவனுடை பிரதான சமையற்காரனும் வேலைக்காரனும் எனக்கு உளவாளிகள். அவர்கள் மூலமாகத்தான் எனக்குச் சங்கதி தெரியவந்தது. நேற்றுமாலை அவனுடைய சமையற்காரனைச் சந்தித்தேன். அவன் சங்கதி தெரிவித்தான். அதாவது அடுத்தமாதம் அவன் எஜமானன் வீட்டில் ஒரு கலியாணம் நடக்கப்போகிறது. அதற்காக ஏராளமான வெள்ளித்தட்டுகள், கிண்ணங்கள், பானபாத்திரங்கள், போஜனபாத்திரங்கள், சீதனம்கொடுக்கச் சாமான்கள்-யாவும் சுத்தவெள்ளியில்-பலவித இரத்தினுபரணங்கள்முதலியவைகளை வாங்

குவதற்காகவே இப்போது அவனுடைய எஜமான் நக ரத்திற்கு வந்திருப்பது. அடுத்தவாரம் அவன் மேற் கண்ட எல்லாப் பொருள்களையும் எடுத்துக்கொண்டு வண்டியில் தன்வீட்டிற்குப் பிரயாணமாகப் போகி ருன்......

தான:— பேஷ் நல்ல பலத்த வேட்டை. ஆகையால் இச்சங் சங்கதியைக் கேட்டவுடனே நீ நகரத்திற்கு புறப்பட்டு வந்தாயாக்கும்.

சாணே:— நேற்றுமாலே சமையற்காரன் இச்சங்கதியைக் கூறின உடனே, என்னைச் செந்தலேகள் தேடிக்கொண் டிருந்தாலும் நான் உடனே புறப்பட்டு இங்குவந்தேன். ஏனெனில் நமது கிழநரியைப்பற்றி நான் முன்னமே போதுமான வரையில் கேள்விப்பட்டிருக்கிறேன். அத ஞல் முன்னடியாகவே அவனிடம்இதைப்பற்றி பேசிக் கொண்டு, நாம் சாமான்களைக் கொண்டுவந்த வுடனே அவன் அவற்றை யுருக்குவதற்கு ஆயத்தமாயிருக்கும் படி எச்சரிக்கை செய்துவிட வேண்டுமென்று வந் தேன். நான் முதலில் பாலூர் சொர்ணத்தின் ஹோட் டலுக்குச் சென்று விசாரித்தேன். அவளுக்கு என் மேல் பூரண நம்பிக்கையுண்டு. ஆதலால் உடனே கிழநரியின் வாசஸ்தலம் இன்னவிடத்தி லிருக்கிற தென்று கூறினள். அங்கு போய் விசாரித்தேன் அவன் அகப்படவில்லே. மறுபடி திரும்பிச் சொர் ணத்தினிடமே திரும்பிச்சென்று சங்கதியைக் கூறி னேன். அவள் சற்று சிந்தித்து "ஆகா நான் மறந்து விட்டு உனக்கு வீணை தொந்திரை கொடுத்தேன்; இன்று அவன் பக்கிரி பொன்னனுடைய இருட் டறைக்குச் செல்லும் வாரமுறை; அங்குதான் சென்

திருப்பான்" என்ருள். பிறகு இங்கு வந்தேன். இத ஞல் தான் இவ்வளவு ஆலசியமாயிற்று......

தான:— சரிசரி தெரிந்தது. இப்போது கிழவன் ஒத்துக் கொண்டானல்லவா?

சாணே:— ஆகா அவன் வழக்கப்படி "உன்னிடம் எந்தப் பெரிய மனிதனுவது தனக்கு நேர்ந்த ஆபத்திஞல் தன் வெள்ளி பொன் சாமான்கள் நகைகள் முதலிய வற்றைக் கொடுத்து தனக்காக விற்று வரும்படி கூறி ஞல் நீ கொண்டுவந்த தட்சணமே நான் நியாயப்படி அவற்றின் கிரயத்தைக் கொடுத்து வாங்கிக் கொள்ளு கிறேன். அவைகளை யெடுத்து வர உணக்குத்துணை வேண்டுமாயின் நெடுநாட்களாய் எனக்குத்தெரிந்த நம் பகமான நண்பன் ஒருவனிருக்கிருன்" என்று உன் னைப்பற்றி கூறத்தொடங்கிஞன். அதற்குள் நீயே வந்து விட்டாய்.

தான:—நயவஞ்சக படுமோசக்காரப்பயல். ஒழியட்டும். எப் படியோ ஒப்புக்கொண்டான்......

சாணே:—ஆகா அதெல்லாம் முடிந்து விட்டது. நான் நாளை காலையே இதை விட்டுப் போய்விடுவேன். ஏனெனில் இப்போது இங்கிருந்தால் ஆபத்திற்கிடமாகும். ஆயி னும் திங்கட்கிழமை மறுபடி என் நண்பனுகிய சமை யற்காரனைக்காண இங்கு வருவேன். அப்போது அவன் தன் எஜமான் இன்ன தினத்தன்று நகரத்தி லிருந்து புறப்படப் போகிருன் என்பதை வெளியிடு வான்.........

தான:—இந்த வேலையில் உனக்குக் கூட்டாளியாய் இன் ெருவர் வேண்டுமல்லவா?

சாணே:—சந்தேகமென்ன? நாம் சம பாகஸ்தாராய் இருப்போம். திங்கட்கிழமை அவசியம் உன்னை இங்காவது அல்லது நீ குறிக்கும் வேறு எந்த விடத்திற்காவது வந்து அவசியம் காண்பேன்.

தான:—இங்கு வேண்டாம். நான் யாரென்று நீயறிந்து கொண்டிருப்பாய். கிழவன் எல்லாம் கூறியிருப்பான். கப்பல் வீதி நான் வசிக்குமிடம்.........

சாணே:—ஆகா யாவும் தெரியும்.

தான:—"சரி, பேச்சு முடிந்தது. நீ கீழே சென்றிரு. நான் கிழவனிடம் ஒரு வார்த்தை கூறிவிட்டு நொடியில் வந்து விடுகிறேன்" என்றான்.

தானப்பன் அவ்வாறே கீழறைக்கு இறங்கினான்.

---

## 24 - வது அத்தியாயம்.

சாணைக்கார சுந்தரம் இருட்டறையிலுள்ள கள்ளர் எதிரில் சென்று உட்கார்ந்ததும், தன் சுங்கானை வாயில் வைத்துக்கொண்டு அங்குள்ள ஆசாமிகளை யொவ்வொருவராய்க் கவனிக்கத் தொடங்கினுன். நாமும் அவர்களைப் பற்றிக் கவனிக்க வேண்டியது நமது கதையின் தொடர்ச்சிக்கு அவசியமாயிருக்கிறது.

ஒருவன் களிமண்ணால் செய்து தட்டையாய்த் தட்டி விட்டது போன்ற மூக்கையும் குழிந்த கண்களையும் மிக்க அகோரமான முகத்தையும் உடையவன். அவன் அதோடு நெற்றியின்மேல் ஒரு கட்டுகட்டிக்கொண்டிருந்தான். அவன் கப்பல் யாத்திரைக்காரருக்கு வேண்டிய சில்லரைச் சாமான்களையும் கப்பலின் பழைய சாமான்களையும் விற்பவன். உண்மையில் அவன் சிறு அளவில் கள்ளச் சொத்துகளை வாங்குபவன். அவைகளைக் கிழநரியிடம் விற்பதற்காகவே அன்று அவன் அங்கு வந்திருந்தான்.

வேறு இரண்டு ஆசாமிகளிருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் கண்கெட்டவர்கள் போல் கண்ணின் மேல் ஒரு கருப்புப் பட்டி கட்டிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களில் ஒருவன் சைனியத்தில் போர் வீரனயிருந்தது போலவும் ஒரு சண்டையில் கண் போய் விட்டது போலவும் அபிநயம் செய்பவன். அவன் பெயர் ஹீரோஜி. ஆனல் சாதாரணமாய் அவன் பிச்சைக்காரன் என்று அழைக்கப்படுவான். மற்றொருவன் சாதாரணமாய்த் தெருத்தெருவாய்ச் சென்று குடைகள் பழுது பார்ப்பவன்.

அவன் பெயர் குடைக்கார கிட்டு. அவன் கண்மேல் பட்டி போட்டு மூடிக்கொண்டிருப்பது இதுவொரு புது மாறு வேடம்.

இன்னொருவன் பார்வைக்கு மரியதையான மனிதன் போலவும் மிக்க துயரமுடையவன் போலவும் காணப்பட்டான். சாதாரணமாய் யாராவது பார்த்தால் முன்பு நல்ல க்ஷேமத்திலிருந்து பிறகு துர் அதிட்டத்தால் மிக்க ஏழ்மை நிலைமையை யடைந்த ஒரு வர்த்தகன் போல் காணப்படுவான். அவன் அம்மாதிரிதான் அபிநயம் செய்வது. தன் நிலைமையை எழுதி தானம் புரியும் இரக்கமான மனமுடையவர்களை யேமாற்றிச் சீவனம் செய்வதுதான் அவன் வேலை. அவன் ஒருவிதமான மருந்தைச் சாராயத்தில் கலந்து குடித்து தான் ஏதோ வியாதியால் மெலிவடைந்திருப்பவன் போல் தன் முகம் வெளுத்திருக்கும் வண்ணம் செய்து கொள்வான். அவன் பெயர் கோபாலு.

அங்கிருந்தவர்களில் இன்னொருவன் எப்போதும் கேலியாகவும் வேடிக்கையாகவும் அகசியமாகவும் பேசுபவன். அவன் முடிச்சவிழ்க்கும் கள்ளர்களுக்கு எஜமான். ஜனங்கள் கூட்டமாய்ச் சேரும் வேடிக்கை ஸ்தலங்கள், திருவிழா, சந்தை முதலிய விடங்களுக்குத் தன் ஆட்களோடு சென்று ஜனங்களின் கவனம் முழுமையும் தன்னிடத்திலேயே யிருக்கும்படி ஜாலங்களும், அகசிய பிரசங்கங்களும் செய்வதில் நிபுணன். அவன் அவ்வாறு ஜனங்களின் கவனத்தைக் கிரகித்துக் கொண்டிருக்கும் சமயம் பார்த்து அவன் ஆட்கள் ஏமாந்தவர்களைக் களவாடுவார்கள். அவன் சாதாரணமாய் ஜாலக்காரன் என்றே அழைக்கப்படுவது.

அங்குள்ள மாதர்கள் கற்பென்பதையே யுணாாதவர்கள். சகல துர் நடக்கைகளிலும் பூரணமாய் ஆழ்ந்து மானம்

என்பதையே மறந்து நடப்பவர்கள். கப்பல் சாமான்கள் விற்பவன் மட்டும் சிறியகிழநரி போன்றவன். அதாவது களவாடப்பட்ட சொத்துக்களை வாங்கிப் பிறகு அவற்றைக் கொண்டுவந்து கிழநரியிடம் விற்பவன். அவன் தவிர அங்குள்ள மற்ற அனைவரும் கள்ளர்களே.

சிப்பாயாயிருந்தவன்போல் பிச்சை யெடுப்பவன் ஒருவரைத் தொடர்ந்து கெஞ்சிக்கொண்டே அவர்கள் பின்னால் செல்வான். சற்று நேரத்திற்குள் மிக்க சாமார்த்தியமாய் அவர்களிடமிருக்கும் கெடியாரமோ, பணப்பையோ எதையோ அவர்களுக்குத் தெரியாமலே களவாடிக் கொள்வான்.

குடைக்காரன், செல்வவந்தர்கள் பெரிய மனிதர்கள் முதலியோர் வீடுகளுக்குச் சமயம் பார்த்துச் சென்று, ஏதாவது குடை பழுது பார்க்க வேண்டியிருந்தால் தயவு செய்து கொஞ்சம் விசாரித்து எனக்கு உதவி செய்ய வேண்டுகிறேன் என்று முன் கட்டிலுள்ள காவல்காரனிடம் தந்திரமாய்க் கூறி அவனை யுள்ளே போகச் செய்து அச்சமயத்தில் அங்குள்ள உடையோ கெடியாரமோ குடையே, விலையுள்ள வேறெந்த சாமானோ அகப்பட்டதை யெடுத்துக் கொண்டு போய் விடுவான். சில சமயங்களில் பின் பக்க வழியாய்ச் சென்று சமையலறையில் அகப்படும் விலையுள்ள சாமான்களைக் களவாடிக் கொண்டுபோவான்.

செல்வவந்தரிடம் பொய் மனுக்களை எழுதிக் கொடுக்கும் கோபாலன் என்பவனும் இம்மாதிரியே. சில சமயங்களில் தரும சிந்தனையுடைய பெரிய மனிதர்களின் வீடுகளுக்குள் செல்ல நேர்ந்த போது சமயம் பார்த்து அங்குள்ளவைகளைச் சாமார்த்தியமாய் களவாடிக் கொண்டு வந்து விடுவான்.

ஜாலக்காரன் தன் ஆட்களைக் கொண்டு களவாடிய பொருள்களைக் கிழ நரியிடம் விற்பதற்காகவே வாரத்திற் கொருமுறை இருட்டறைக்கு வருவது.

அங்குள்ள மாதர்கள் துர் நடக்கையாலும் களவாலும் சம்பாதிப்பதோடும் பாதைகளில் அகப்படும் ஏமாந்தவர்களை யும் குடித்த வெறியால் நிதானமின்றித் திகைப்பவர்களையும் தந்திரமாய்க் கள்ளர் கூடும் இருட்டறை முதலிய இடங் களுக்கு அழைத்துப் போவார்கள். அங்கு அம்மனிதர் களிடமுள்ள நகைகள் பணம் முதலிய யாவற்றையும் பறித்துக்கொள்வார்கள். பெரும்பாலும் அவர்கள் மிக்க குரூரமாகவும் அடித்து இம்சிக்கப் படுவார்கள். இம்மாதிரி சந்தர்ப்பங்களில் பல படு கொலைகளும் நடப்பது சாதார ணம்.

நமது சாணைக்காரன் இவர்கள் எதிரில் உட்கார்ந்து கொண்டு சுங்கானைப் பிடித்துக் கொண்டு ஒவ்வொருவரை யும் நன்ருய்க் கவனித்துக் கொண்டான். அவனுடைய முரட்டு உடைகளையும் சீப்பைக் காணுமல் காடுபோலிருக்கும் சிகையையும் மாசடைந்த முகத்தையும் அவன் வாயிலிருக் கும் குட்டையான சுங்கானையும் நோக்க அங்குள்ள கூட் டத்தாரில் ஒருவனயிருக்க அவன் தகுதி யுடையவனே யென்று தோன்றியது.

ஹோட்டல் காரனுகிய பக்கிரி பொன்னனுடைய நாய் ஒன்று அங்கிருந்தது. அது மிக்க பயங்கரமும் குரூரமுமான நாய். அது அடிக்கடி மும்முரமாய்க் குரைத்துக் கொண்டு அவ்வீடு முழுமையும் சுற்றி வரும்.

இப்போது அக்கள்ளர்களுக்குள் அச்சமயம் நடக்கும் சம்பாஷணையை நாம் சற்று கவனிக்கவேண்டும்.

கோபால் என்பவன் ஹீரோஜி யென்ற பிச்சைக்காரனை நோக்கி, "தேவன் சங்கதி யென்ன? அவனைக்காணேமே" என்றான்.

பிச்சைக்காரன், "அவன் சங்கதியா? உனக்குத் தெரியாதோ கூறுகிறேன் கேள். ஐந்தாறு நாட்களுக்குமுன் அவன் ஆபத்தில் சிக்கிக்கொண்டான். அதனுல் அவன் முன்னிருந்த வாசஸ்தலத்தை விட்டு கம்பி நீட்டிவிட்டான். அவன் களவாடுவதை விட்டுவிட்டு கள்ளநாணயங்கள் செய்யத்தொடங்கினான். இச்சங்கதி யெப்படியோ துப்பறியும் செல்வநாதனுக்குத் தெரிந்துவிட்டது. அவன் சமயம் பார்த்து தேவன் வீட்டிலிருக்கும்போது வந்து மடக்கிக் கொண்டு வீட்டை சோதிக்கத்தொடங்கினான். அவன் கூட அழைத்து வந்த இரண்டு ஆட்களும் வாசற்படியில் நின்று கொண்டிருந்தார்கள்.

நெடுநேரம் ஒன்றும் அகப்படவில்லை. தேவன் அங்கு நின்று நகைத்துக்கொண்டே பார்த்துக்கொண் டிருந்தான். கடைசியில் செல்வநாதன் அங்கிருந்த தேவன் படுத்துக் கொள்ளும் மஞ்சத்தைச் சற்று அப்புறம் நகர்த்திவிட்டு அம்மஞ்சத்தின் கால்களில் ஒன்றின் கீழிருந்த கல்லைப் பெயர்த்தான். உடனே தேவன் முகம் இருளடைந்து விட்டது. அக்கல்லின் கீழ் நான்கங்குல சதுரத்துவாரம் இருந்தது. அதில் ஒரு கையை விடலாம். செல்வநாதன் அதில் தன் கையைவிட்டு ஒரு கயிற்றைப் பிடித்திழுத்தான். அக்கயிற்றின் மறுமுனையில் கட்டப்பட்டிருந்த ஒரு பை வெளியில் வந்தது. அந்தப்பையில் பலவிதமான கள்ள நாணயங்கள் இருந்து அகப்பட்டன. அதைக்கண்டதே தேவன் சட்டென்று வாசற்படியிலிருக்கும் இரண்டு ஆட்களையும் ஆளுக்கொரு குத்து விட்டு அவர்கள் சமாளிப்பதற்குள் அறையின்

கதவை மூடி வெளிப்பக்கம் தாளிட்டுக்கொண்டு ஓடி விட்டான் அச்சமயம் செல்வநாதன் சுவருக்கும் மஞ்சத்திற் கும் இடையிலுள்ள சந்தில் உட்கார்ந்து குனிந்து கொண் டிருந்ததால் சட்டென்று எழுந்து வந்து தன் ஆட்களுக்கு உதவி செய்யவாவது தேவனைப்பிடிக்கவாவது முடியாமற் போயிற்று. பிறகு அவர்கள் கதவையுடைத்து வெளி வரு வதற்குள் தேவன் கண்ணுக்ககப்படாது போனதிக்குத் தெரியாமற் போய்விட்டான்" என்ருன்.

186539

அங்கிருந்த மாதர்களில் ஒருத்தி "ஆனல் தேவன் இப்போதெங்கிருக்கிருன் என்று தெரியாதோ?" வென் ருள்.

பிச்:—"தெரியாது. செல்வநாதனிடம் மற்ற அக்காட்சிக ளனைத்தும் எப்படி யகப்பட்டன தெரியுமா — அவன் எப்படியோ தேவன் வீட்டில் ஒரு கள்ள அல மாரி சுவரில் எங்கோ இருக்கிறதென்று தெரிந்து கொண்டான். தேவன் ஓடிவிட்ட பின் சோதித்துப் பார்த்து செல்வநாதன் அந்த அலமாரியை யெப்படி யோ கண்டுபிடித்து விட்டான். அதில் கள்ள நாண யங்கள் செய்யும் அச்சுகள், உருக்கப்பட்ட உலோ கம், இன்னும் அந்தவேலைக்கு அவசியமான சகல சாமான்களும் அகப்பட்டன. முன் தரையிலிருந்து கள்ள நாணயங்கள் அகப்பட்டதோடு ஒருதுண்டு கடிதத்தில் அந்த நாணயங்கள் அசல் வெள்ளி நாண யங்களைப்போலவும், கையாடப்பட்ட பழைய நாண யங்களைப்போலவும் தோன்றும்படி செய்வதற்கான ஒருமுறை தேவன் கைத்தாலேயே எழுதப்பட்டிருந் தது. அது புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட முறை. நேற்று விஜயன் என்முன் அதைப்பரீக்ஷித்துப் பார்த்

தான். மிக்க நேர்த்தியானதே. அது எப்படி யெனில் அச்சடிக்கப்பட்ட நாணயத்தை நெருப்பில் நன்றாய்க் காய்ந்த இரும்புத்தகட்டின் மேல் வைத்து, அதன் நிறம் மாறத்தொடங்கும் போது எடுத்து ஒரு தவிட்டு மூட்டையில் போட்டு சற்றுநேரம் நன்றாய்க்குலுக்க வேண்டும். பிறகு எடுத்து பாற்கட்டியினால் தேய்த்து ஒரு முரட்டுத்துவாலையால் துடைக்க வேண்டும் மிக்க அழுத்தமாய் அதிக நேரம் தேய்க்கலாகாது" என்றான்.

மிக்க அக்கரையாய்க் கவனிக்காதவன்போலவே யாவும் கேட்டுக்கொண்டிருந்த சாணைக்கார சுந்தரம், "இது சாதாரண முறையே. அப்படியானால் விஜயன் நமது வழியில் திரும்பிவிட்டானே. அவன் குறி சொல்லிக்கொண்டு திரியும் பாச்சாவோடு கூட நாட்டுப்புறங்களில் முன் போலவே சோப்பு, தீக்குச்சி முதலிய சில்லரைச் சாமான்களை விற்றுக் கொண்டிருக்கிறான் என்றே நான் எண்ணியிருக்கிறேன்" என்றான்.

பிச்சைக்காரன்:—"அப்படித்தான் இருந்தான். இப்போது அவர்கள் இருவரும் கூட்டாய் மணல் மேட்டில் எங்கோ ஒருவிடத்தில் கள்ள நாணயம் அச்சடிக்கும் தொழிலைச் செய்துகொண் டிருக்கிறார்கள்'' என்று கூறிவிட்டுக் கப்பற் சாமான்கள் விற்கும் சொக்கனை நோக்கி,

"சொக்கா! உன் கண்ணில் காயமும் நெற்றியிலுள்ள காயமும் எப்படி யுண்டாயின?'' வென்று நகைத்துக் கொண்டே கேட்டான்.

சொக்கன்:—நீ இங்நேரம் பேசிக்கொண்டு வந்தாயே அந்தத் தேவன் என்ற பயலே என் ஆபத்துக்குக் கா

ணம். ஆகையால் அவனைப்பற்றிய இன்னொரு கதை யெனக்குத் தெரியும்.

அங்குள்ள மாதரில் ஒருத்தி "அந்த வேடிக்கைக் கதையைக்கூறக்கூடாதோ?" வென்றாள்.

சொக்கன் "நீங்கள் கேட்கப் பிரியப்படுகிற வரையில் கூறுகின்றேன் கேளுங்கள். முன்கூறியது போல் தேவன் செல்வநாதனிடம் அகப்படாமல் தப்பியோடியதே நேராய் என் வாசஸ்தலத்திற்கு வந்தான். நான் அவனைக் கீழ்க்கட்டில் ஒரு அறையில் இரும்புச் சாமான்களும் பலவகைப்பட்ட புராணங்களும் குவிந்துகிடக்குமிடத்தில் மறைத்து வைத்தேன். செல்வநாதன் எப்படியோ இச்சங்கதியைத் தெரிந்துகொண்டு, தன் ஆட்களோடுவந்து தெருக்கதவைத் தட்டினான். அப்போது இரவு நெடுநேரமாய்விட்டது. அச்சமயம் நானும் தேவனும் சாராயம் அருந்திக்கொண்டே சம்பாஷணையி லிருந்தோம். நான் உடனே சந்தேகப்பட்டு மாடிமேலேறிச் சாளரத்தைத் திறந்து "யாரது இந்நேரத்தில் கதவைத் தட்டுகிறது?" என்று கேட்டேன். செல்வநாதன் தன் பெயரைக்கூறி நான் உடனே உள்ளே யொரு காரியமாய் வரவேண்டும் என்றான். நான், 'தேடக்கூடிய ஆட்கள் இங்கொருவரும் இல்லையே' யென்றேன். அதற்கவன் "அதைப்பற்றி நான் ஒன்றும் உன்னைக் கேட்கவில்லை. உடனே கதவைத் திற" என்றான். அதற்குள் என்கூடவே மாடிமேல் வந்த தேவன் என்னைநோக்கி "நீ சற்றுநேரம் அவனோடு வாக்குவாதம் செய்து பிறகு கதவைத்திற. இன்றேல் அவன் விடாகண்டன். அதற்குள் நான் மேல்தளத்திற் கேறிப் பக்கத்து வீடுகளின் கூறைகள்மேல் போய் கம்பி காட்டுவிடுகிறேன்" என்றான்.

நான் சரியென்று கூறிவிட்டுச் செல்வநாதனை நோக்கி "அய்யா என்வீட்டில் நீ தேடத்தக்க ஆட்கள் யாருமில்லையென்று கூறும்போது அகாரணமாய் ஏன் கதவைத் திறக்கச் சொல்லுகிறீர்?" என்றேன். அத்துஷ்டன் இதோடு தெரிவிக்கிறேன் என்று கூறிவிட்டுத் தன் ஆட்களை நோக்கி "சீக்கிரம் கதவை யுடைத்து நுழையுங்கள் உள்ளே. சங்கதி தெரிந்தது. ஆலசியம் செய்தால் பட்சி பறந்துபோம்" என்றான். அவர்கள் அவ்வாறே கதவை யுடைக்கத் தொடங்கி விட்டார்கள். நான் "அய்யோ அநியாயமே காரணமில்லாமல் கதவை யுடைத்து என் வீட்டிற்குள் நுழையவேண்டியதென்ன? நான் சும்மா விடப்போகிறதில்லை......." என்று சற்றுநேரம் கூவினேன். அச்சமயம் எப்படியோ சாளரத்திற்கு வெளியே சற்று அளவுகடந்து குனியவே அப்படியே தலைகீழாய்க் கீழே வீதியில் போய் விழுந்தேன். நான் பிழைத்ததே மிக்க அருமை. கள்ளருக்கு எமனுயிருக்கும் அந்தச் செல்வநாதன்மேல் எனக்கு எவ்வளவோ வெறுப்பிருந்தாலும் உண்மையைக் கூறுகிறேன். நான் கீழே வீழ்ந்ததைக் கண்டதே அவன் கதவை யுடைப்பதை விட்டு விட்டுத் தன் ஆட்களோடு ஓடிவந்து என்னைத் தூக்கி உபசரித்தான். விழுந்தபோதுதான் இந்த ஆபத்து எனக்கு நேர்ந்தது. இச்சம்பவமே தேவன் தப்பித்துக்கொண்டு போய் விட்டதற்கு அனுகூலமாயிற்று......." என்று கூறும்போது, ஜாலக்காரன் கலகலவென்று நகைக்க யாவரும் அவனை நோக்கினார்கள். அவன் "நீ கூறி முடித்துவிடு; பிறகு கூறுகிறேன் என் சங்கதியை" யென்றான்.

கப்பற் சாமான் விற்கும் சொக்கன் "இவ்வளவே சங்கதி; பிறகு செல்வநாதன் வீட்டிற்குள்வந்து பார்த்து தனக்குள் பட்சி பறந்துவிட்டதென் றுணர்ந்து திரும்பிச்சென்

ருன். பிறகு தேவனைப்பற்றி நான் ஒன்றுமே கேள்விப்பட வில்லை" என்று முடித்தான்.

ஜாலக்காரன்:—"நான் ஏன் நகைத்தேனென்றால் இச்சங் கதியை நான் முன்னமே கேள்விப்பட் டிருக்கிறேன். நீ கூறிய அந்த தேவன் என்பவன் மிக்க நெட்டை யாகவும் ஒல்லியாகவும் நீண்ட கால்களும் கைகளு முடையவனாகவு மிருப்பானே? சாய்ந்து சாய்ந்து நடப் பானே?" என்றான்.

பிச்சைக்காரன்:—"ஆம் ஆம். நீ விவரித்த மனிதனே. அதேமாதிரிதான் இருப்பான்" என்றான்.

இதைக் கேட்டதே ஜாலக்காரன் கோபத்தோடு "ஆ மோசக்காரக் கள்ளப்பயல்! ஆகட்டும் விட்டேனா!" என்றான்.

யாவரும் என்ன என்ன சங்கதியென்ன வென்றார்கள்.

ஜாலக்:—"அந்தப்பயல் என்னையும் என் ஆட்களையும் மோசம் செய்துவிட்டு அகப்பட்ட சொத்தில் முக்கால் பங்கை யெடுத்துக்கொண்டு ஓடிவிட்டான். அதெப்படி யென்றால் கூறுகிறேன் கவனமாய்க் கேளுங்கள். சனிக்கிழமை யன்று சாவடித்தெருவின் எதிரில் நடந்த சந்தைக்கு நானும் என் கூட்டமும் சென்றிருந்தோம். இவன் அங்கு என்னிடம் வந்து பேசினான். இவனை யிதற்குமுன் நாங்கள் யாரும் கண்டதில்லை. ஆகை யால் இவன் யாரென்றே எங்களுக்குத் தெரியாது. இவன் என்னிடம் பேசியமாதிரியால் நான் இவன் நமக்குத் தக்க கூட்டாளியாகவே யிருப்பானென்று நினைத்தேன். இவனும் என் ஆட்களோடு சேர்ந்து கொண்டு அவர்களில் ஒருவனாய் வேலை செய்வதாக வாக்களித்தான்.

அதன்மேல் நான் இவனைச் சந்தையிலிருந்த ஹோட்டலுக் கழைத்துக்கொண்டுபோய் சாராயம் சிற்றுண்டி முதலியன வாங்கிக் கொடுத்தேன். அங்கு பேசிக்கொண்டிருக்கையில் இவன் இக்கதையைக் கூறினான். அப்போதும் தன் பெயரையாவது இருப்பிடம் ஊர் பெயர் முதலிய எதையும் கூறவில்லை.

பிறகு அன்று வேடிக்கை நடந்தபோது நான் ஒரு விதப் பந்தய ஆட்டம் வைத்து ஒரு மேஜைமேல் அதற்கு வேண்டிய கருவிகளை வைத்து ஜனங்கள் அதில் வந்து சேரும்படி தந்திர ஜாலங்களைக் காட்டிக்கொண்டிருந்தேன். அச்சமயம் செல்வவந்தனான நாட்டுப்புறத்தான் ஒருவன் தட்டென்றுவந்து ஒரு சவரான் பந்தயம் வைத்தான்.

ஆட்டம் சுறுசுறுப்பாய் நடந்துகொண் டிருக்கையில் நமது ஆட்களில் ஒருவன் திடீலென்று அந்த நாட்டுப் புறத்தான் தன் தோள்மேல் போட்டுக்கொண் டிருந்த குட்டையை யெடுத்து அவன் தலைமேல் மூடிவிட்டான். தேவன் அவன் கெடியாரத்தைப் பிடுங்கினான். உடனே எங்கும் குழப்பமுண்டாய்விட்டது. நமது ஆட்கள் சுறுசுறுப்பாய் அகப்பட்டவற்றைப் பொருக்கிக்கொண்டு, யாவரும் மறுபடி எங்கு ஒன்றாய்ச் சேரவேண்டுமென்று ஏற்பாடு செய்திருந்தோமோ அங்கு வந்து சேர்ந்தார்கள். நான் குழப்பமுண்டானதே ஆட்டமேஜையை மடித் தெடுத்துக் கொண்டு துரிதமாய் நழுவிவிட்டேன். தேவன் அந்த நாட்டுப்புறத்தானிட மிருந்த நகைகள் கெடியாரம் பணப்பை யாவற்றையும் பிடுங்கிக்கொண்டான்.

எல்லாரும் குறித்தவிடத்தில் வந்துசேர்ந்தும் தேவன் மட்டும் வரவில்லை. ஒருசமயம் போலீஸாரிடம் சிக்கிக் கொண்டானோவென்று கருதினோம். கடைசியில் பார்த்தால்

அவன் போலீஸாரிடம் சிக்கிக்கொள்ள வில்லையென்றும், அகப்பட்ட கொள்ளைப் பொருள்களையெல்லாம் எடுத்துக் கொண்டு எங்கள் பாகங்களைக் கொடாமல் மோசம் செய்து விட்டு ஓடிவிட்டான் என்றும் தெரிந்தது. இப்போதுதான் அவன் யாரென்று எனக்குத் தெரிந்தது'' என்றான்.

இச்சங்கதிகளைக் கேட்ட கள்ளரெல்லாம் "சே வெட்கக்கேடு வெட்கக்கேடு" என்று கூவினார்கள். அச்சமயம் தானப்பன் கிழநரியிடம் பேசிவிட்டுக் கீழறைக்கு இறங்கி வந்தான். பக்கிரி பொன்னனும் தன்னறையிலிருந்து குடி வெறியோடு கையில் ஒரு புட்டி சாராயம் எடுத்துக் கொண்டுவந்து கப்பல் சாமான் விற்பவன் பக்கத்தில் உட்கார்ந்தான்.

அவன் உட்கார்ந்ததும் புட்டியில் கொண்டுவந்த சாராயத்தை ஒருபானத்தில் விட்டு "நமது புதுநண்பராகிய சாணைக்கார சுந்தரத்தின் சுகத்திற்காக அருந்துங்கள்'' என்றான். அவ்வாறே முன்னே தானப்பனும் பிறகு மற்றவர்களும் அருந்தினார்கள். பக்கிரி பொன்னப்பன் அதிகமாய்க் குடித்ததால் நாற்காலியிலிருந்து கீழே உருண்டு விட்டான். சற்றுநேரம் அது ஒரு பெரிய வேடிக்கையாயிருந்தது.

அதன் பிறகு தானப்பன் அங்குள்ளவர்களை நோக்கி, "நண்பர்களே! கிழநரி அவரவர்களுக்குச் சேரவேண்டிய தொகையைக் கொடுப்பதற்காகவே மாடிமேல் காத்துக் கொண்டிருக்கிறான்'' என்றான்.

அம்மொழிகளைக் கேட்டதே தானப்பன், சாணைக்காரன், பக்கிரி இவர்கள் தவிர மற்றபேரனைவரும் ஆவலோடெழுந்து ஒருவர் பின்னால் ஒருவராய் ஏணிமேலேறிச் சென்றார்கள். அங்கு மிக்க கோஷ்டமும் சாபனைகளும், பிரதிக்கினைகளும், வாக்குவாதங்களும் நடந்தன. என்ன நடந்தும்

கடைசியில் அந்த ஏழைக்கள்ளர்கள் தாங்கள் கொடுத்த பொருள்களின் விலைமதிப்பிற்குப் பத்தில் ஒருபாகமே பெற்றுக் கொண்டு திரும்பவேண்டிய தாயிற்று.

அச்சொற்பப்பணம் கைக்கு எட்டவே அக்கள்வர் யாவரும் மறுபடி சாராயம் குடிக்கத்தொடங்கினர்கள்.

அச்சமயம் யாரோ கதவைத்தட்டினர்கள். பக்கிரி தள்ளாடிக்கொண்டே யெழுந்து சென்று கதவைத்திறந்தான். உடனே ஒரு ஸ்திரீயின் குரல் பக்கிரியோடு பேசும் சத்தம் கேட்டது. பிறகு தெருக்கதவு மூடித் தாளிடப்பட்டதும் முன்அறையில் யாரோ புதுஆட்கள் அழைத்துக் கொண்டு போகப்பட்டதாய்த் தெரிந்தது.

தானப்பன் "யாரது என்னசங்கதி தெரியவில்லையே" என்றன். அதற்குள் பக்கிரி அந்த அறைக்குள் வந்தான். அவன் முகக்குறியால் அவன் மனதில் ஏதோ பெரிய மர்மமான இரகசியசங்கதி வைத்துக் கொண்டிருப்பவன் போல் தோன்றியது.

---

## 25 - வது அத்தியாயம்.

தானப்பன் பக்கிரியை நோக்கி "என்ன சங்கதி, என்னமோ பெரிய மர்மமா யிருக்கிறதே?" என்றான்.

பக்கிரி:— "ஆ! என்ன அழகு, எவ்வளவு இனிமையான வாலிப வனப்பு?" என்றான்.

பக்கிரி:— "நமது நீலாள் வழி தவறிப்போய் பரிதபித்துக் கொண்டிருந்த ஒருகன்னிகையை அழைத்துக்கொண்டு வந்திருக்கிறாள். அக்கன்னிகை மாசுமறு வில்லாதவள். அக்கன்னிகை மிக்க ஆபத்தான நிலைமையிலிருந்தாள். ஆனால் பண இக்கட்டு ஒன்றுமில்லை. ஏனெனில் அவள் உடைகள் உயர்தரமானவைகளே. நல்ல நகைகள் அணிந்துகொண் டிருப்பதோடு பைநிறையப் பணமும் வைத்துக்கொண் டிருக்கிறாள். நீலாள் அவளுக்கு நம்பகம் உண்டாகும் வண்ணம் நல்ல கதைகட்டி விட்டிருக்கிறாள் என்று தெரிகிறது" என்று கூறிவிட்டு, அங்குள்ள மாதர்களை நோக்கி,

"உங்களில் யாராவது சென்று நீலாளின் சகோதரி யென்று அபிநயம் செய்துகொண்டு அப்பெண்ணினிடம் சற்று நேரம் இருந்தால் நீலாள் இங்குவந்து நடந்த சங்கதியை விவரமாய்க் கூறுவாள்" என்றான்.

உடனே அம்மாதர்களில் ஒருத்தி யெழுந்து "நான் போகிறேன். நான் அவளுக்கு இன்னும் நம்பகமுண்டாகத்தக்க விதமாகவே மிக்க நாகரீகமாகவும் யோக்கியதை

யுடையவள் போலவுமே நடந்து கொள்வேன். ஆனல் அவ ளுக்கு என்னென்று கூறுவது?" என்ருள்.

பக்:—"என்ன சொல்வது? இது ஏழ்மையான இடமாய்த் தோன்றினும் மிக்க மரியாதையான விடமென்றும், இங்குள்ளவர்கள் ஏழைகளாயினும் மிக்க நாணயமும் யோக்கியதையு முடையவர்களென்றும் கூறு. நீ நீலாளின் சகோதரியென்றும் உங்கள் தாய்தந்தையர்க ளோடு இங்கே வசித்துக்கொண் டிருப்பதாகவும் கூறு. ஒரு சமயம் அவள் கலவரமடைந்தால் இதைவிட்டுத் தப்பித்துக்கொண்டு போகாதபடி மட்டும் மிக்க ஜாக்கி ரதையாயிரு" என்ருன்.

அம்மாது அவ்வாறே சென்ருள். சற்று நேரத்திற்குள் நீலாள் அங்கு வந்தாள். அவள் அழகுடையவள். சற்று உயரமாய் பார்வைக்கு நேர்த்தியாய் இருப்பவள். அவளுக்கு வயது பத்தொன்பதாகிறது. அங்குள்ள மற்ற மாதர்களைப் போல் அவளும் துர்நடக்கைகளில் பூரணமாய் முழுகினவ ளேயாயினும் இன்னும் மடையாமல் பார்வைக்கு மரியா தையானவள் போலவே தோற்றப்படுவாள். அதிலும் உலக அனுபவமில்லாத வாலிபகன்னிகைகள் இவள் உண்மையை யறியாது சுலபமாய் ஏமாந்து போவார்கள். அதற்குத் தக்கபடி மேல் சுத்தமுடையவளாய் நாணயமான உடைக ளணிந்து கொண்டு நாணத்தோடு நடப்பவள்போல் அபி நயம் செய்வாள்.

ஆகையால் இவள் மிக்க தந்திர சாமார்த்தியங்களை யுடையவளும், மற்ற மாதரைக்காட்டிலும் மிக்க அபாயகா மானவளுமாகும். இவள் உளவறியாதவர்கள் குடித்த வெறி யால் நிதானமில்லாதவர்களும், வழி தெரியாது அவதிப்படு பவர்களுமாகிய ஆடவர்களைத் தந்திரமாய் இருட்டறை

போன்ற பலவிடங்களில் ஒன்றுக் கழைத்துச்செல்வாள். அங்கு அவர்களிடமுள்ள நகைகள் பணம் முதலிய யாவும் பறித்துக்கொள்ளப்படும். பெரும்பாலும் அவர்கள் மிக்க குரூரமாகவும் நடத்தப்படுவார்கள். கொலைகளும் சாதாரண மாய் நடப்பதுண்டு. இதுபோதாமல் இச்சண்டாளி, கள் ளங்கபடறியாத பாலிய கன்னிகைகளை யேமாற்றி இத்த கைய விடங்களுக் கழைத்துப்போய் அவர்களைத் துர்நடக் கைகளில் பிரவேசிக்கும்படி மயக்கிவிடுவாள். அந்தோ அவர் கள் பிறகு தாய் தந்தையர் சுற்றத்தார் குலங் கோத்திரம், கற்பு, யோக்கியதை, மானம் யாவுமிழந்து அங்குள்ள அநாசார மாதர்களைப்போல் ஆய்விட வேண்டியதே. அவளைக் கண்டதே தானப்பன் முதலிய அனைவரும் மிக்க சந்தோஷத்தோடு அவளுக்கு நல்வாவு கூறி உபசாரம் செய்தார். நமது சாணக்கார சுந்தரம் தவிர, அங்குள்ள மற்ற அனைவரையும் அவள் நன்குணர்வாள். ஆயினும் சுந் தரம் மட்டும் "நீ யென்னை யொருசமயம் அறியாதிருக்க லாகும். ஆனால் என்வரையில் உன்னை நம்மவர்கூடும் பல விடங்களில் கண்டிருக்கிறேனாதலால் நான் உன்னையறி வேன்" என்றான்.

இத்தகைய பாமதுஷ்டியிடம் கெட்டகாலத்தால் இப் போது சிக்கிக்கொண்ட கன்னிகை யாரென்று பார்ப்போம்.

நீலாள் கள்ளர் கூட்டத்தில்வந்து உட்கார்ந்ததும் தான் அக்கன்னிகையை யழைத்து வந்த விஷயத்தைப்பற்றி யவர் களிடம் கூறினாள். அது எவ்வாறு சம்பவித்ததெனில், நீலாள் ஜாடித்தீவிற்கு அருகிலுள்ள வீதிகளின் வழியாய் வந்து கொண்டிருந்தபோது ஒரு வீட்டின் வெளிவாயிற்படி களண்டை ஒரு அழகிய கன்னிகை மிக்க ஆயாசத்தோடு சோர்வடைந்தவள்போல் உட்கார்ந்திருப்பதை வீதியிலெரி

யும் தீபவொளியால் கண்டாள். உடனே அவள் நாணய மானவளென்றும் மாசற்றவளென்றும் நல்ல நிலைமையிலுள் ளவளென்றும் இச்சமயம் ஏதோ ஆபத்தில் சிக்கிக்கொண்டு உதவிவேண்டிய நிலையி லிருக்கிறாளென்றும் தெரிந்து கொண்டு அவளருகில் சென்று மிக்க இரக்கத்தோடும் அன் போடும் சம்பாஷிக்கத் தொடங்கினாள்.

அக்கன்னிகை இவள் உடைகளையும் பேச்சையும் கண்டு இவள் நம்போன்றவளே யென்று எண்ணிக்கொண்டு, "அம்மா! நான் வழிதவறிப்போய் திரிந்து திரிந்து மிக்க ஆயாச மடைந்துவிட்டேன்; சமீபத்தில் எங்காவதுள்ள ஒரு யோக்கியமான ஹோட்டலுக்கு என்னையழைத்துக்கொண்டு போய்விட்டால் மிக்க நன்றி பாராட்டுவேன். எனக்குச்செய் யும் உதவிகளுக்கும், இரவு தங்கும் அறைக்கு வாடகைக் கும் யாவற்றிற்கும் திருப்தியான பணம் அளிப்பேன். அதைப்பற்றி யொன்றும் சந்தேகிக்கவேண்டாம்" என்று அவளுக்கு மெய்ப்பிக்கத் தன்மடியிலிருந்த பணப்பையை யெடுத்துக்காட்டினாள். அதில் மிக்க பணமிருப்பதையும் அக்கன்னிகை யணிந்துகொண்டிருக்கும் ஆபரணங்களையும் கண்ட நீலாள் "பேஷ், இன்று நமக்கு நல்லவேட்டை யகப் பட்டது. இதை விடலாகாது" என்றெண்ணிக்கொண்டு, சமீபத்திலிருக்கும் பக்கிரி பொன்னனுடைய இருட்டறை க்கு அவளை யழைத்துவந்தாள்.

அக்கன்னிகை மிக்க வியாகூலத்தில் இருப்பதோடு களைத்து ஆயாசத்தோடிருந்ததால் எந்த விடமாயினும் இரா விற்குத்தங்க இடம் அகப்பட்டால் போதுமென்று கருதி னாள். அதனால் தன்னை யழைத்துச் செல்லும் மாது எத் தகையவளென்றும் அங்குள்ள மனிதர்கள் வீடுகள் இவற் றின் நிலைமை எவ்வாறிருக்கிறதென்றும் சற்றேனும் கவ

ணிக்க அவளுக்கு அனுகூலப்படவில்லை. தன்னை யழைத்துச் செல்லும் கன்னிகை ஏழையாயிருந்தாலும் யோக்கியமான குடும்பத்தைச் சேர்ந்தவளா யிராவிட்டால் நம்மிடம் இப்படி இரக்கமும் அன்பும் காட்டமாட்டாளென்றும் வீடு எளிய வர்கள் வாசம்செய்வதாய்த் தோன்றினும் அவர்களெல்லாம் யோக்கியமான குடும்பிகளாகவே யிருக்குமென்றும் நம்பிக்கொண்டாள். அதோடு இருட்டறைக்குள் கூடியிருக்கும் ஆடவரும் மாதர்களுமாகிய கள்ளர்களை யவள் காண வில்லை.

அவள் முன்னே யிருக்கும் ஒரு அறைக்கு அழைத்துக்கொண்டு போகப்பட்டாள். இம்மாதிரி ஏமாற்றி அழைத்துக்கொண்டு வரப்படும் ஆசாமிகள் நேராய் அந்த அறைக்குத்தான் கொண்டுபோகப்படுவது. இதற்காகவே அந்த அறைமட்டும் நாணயமாகவும் சுத்தமாகவும் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. ஆகையால் அந்த அறையைக் காண்போர் இங்கு வசிப்பவர்கள் செல்வந்தர்களாயிராவிட்டாலும் நாணயமும் யோக்கியதையு முடையவர்களாகவே யிருப்பார்கள் என்றே மதித்துக்கொள்வார்கள். ஆகையால் இப்போது அங்குவந்த கன்னிகை நாம் ஒருசமயம் துஷ்டரிடமாவது அயோக்கியரிடமாவது சிக்கிக்கொண்டோமோ? இங்கு நமக்கு ஏதேனும் ஆபத்து நேருமோ என்று சற்றும் சந்தேகம் கொள்ளாமல் நம்பிக்கை யடைவதற்கு அந்த அறையும் ஒரு காரணமாயிருந்தது. அப்போது நிலவுகாலமாயினும் நீலாள் அவளைச் சந்திப்பதற்குச் சற்று முன்பே சந்திரன் அஸ்தமனமாய்விட்டது. ஆகையால் ஜாடித் 'தீவிற்குள் நுழைந்து வரும்போது அங்குள்ள நெஞ்சுதிடுக்கிடும் கோரக் காட்சிகளை யக்கன்னிகை காணவில்லை.

நீலாள் சங்கதியைக் கூறிமுடித்ததும் எழுந்து அக் கன்னிகையிடம் சென்றாள். அதற்குமுன் பக்கிரி அங்கு

அனுப்பிய மாது மிக்க சாமார்த்தியத்தோடு நடந்துகொண்டதால் அக்கன்னிகை நாம் மரியாதையான விடத்திலேயே வந்து சேர்ந்திருக்கிறோம் என்றே பூரணமாய் நம்பிக்கொண்டாள். நீலாள் அங்கு வந்ததே முன், வந்திருந்தமாது திரும்பித் தன் நண்பர்கள் கூட்டத்தில் வந்து சேர்ந்துவிட்டாள்.

நீலாள் தான் அழைத்துவந்த கன்னிகையிடம் மிக்க இரக்கத்தோடும் அன்போடும் பேசி அவளுக்கு ஆகாரம் ஏதேனும் தேவையா என்று கேட்டாள். அக்கன்னிகை தனக்குள்ள ஆயாசத்தால் தான் உடனே சயனித்துக் கொண்டு இளைப்பாற வேண்டியதே மிக்க அவசியமாய் இருக்கிறதென்றும் இப்போது எவ்வகை யாகாரமும் வேண்டாமென்றும், தன் உடைகளைக்கூட களைய முடியாமல் அப்படி சயனித்துக்கொள்ளப் போவதாகவும் கூறினள்.

அவள் ஏதாவது சந்தேகங்கொண்டாவது, பயமடைந்தாவது அப்படிக் கூறவில்லையென்றும் உண்மையாகவே மிக்க ஆயாச மடைந்திருப்பதாலேயே அப்படிக் கூறினளென்றும் நீலாள் அறிந்துகொண்டாள். அதோடு இப்போது அறைக்குள்ளிருந்த தீபவொளியில் நிதானமாய் நீலாள் அக்கன்னிகையைப் பார்த்தபிறகு, அவள் பையில் அதிகபணமிருப்பதோடு அவள் அணிந்திருக்கும் உடைகள் விலை பெறத்தக்கவைகளென்றும், பொன்கெடியாரம், பொன் கொலுசு, விரல்களில் கணையாழிகள் முதலிய ஆபரணங்களும் அணிந்திருக்கிறளென்றும் கண்டாள். அதனல் முன் இருந்ததைவிட இப்போது அவளுக்கு மிக்க சந்தோஷமுண்டாய் விட்டது.

அக்கன்னிகை சற்றுநேரத்திற்குள் தன் மேல்போர்வையை மட்டும் கழற்றிவிட்டு, கெடியாரத்தையும் சங்கிலியையும் படுக்கையில் தன் தலைமாட்டில் வைத்துக்கொண்டு

சயனித்துக் கொண்டாள். நீலாள் அவளுக்கு உபசாரவார்த்தைகள் கூறி, அவள் சந்தேகமாவது பீதியாவது அடையாதிருப்பதற்காக தீபத்தை யணைக்காமல் வைத்துவிட்டு கதவைச் சும்மா மூடிக்கொண்டு வெளிவந்து விட்டாள்.

அவள் இருட்டறையிலுள்ள தன் நண்பர்களிடம் வந்து கூடியதே, அக்கன்னிகையிடம் விலையுயர்ந்த ஆபரணங்களும் பைநிறையப் பணமும் இருக்கிறதை விவரமாய் அவர்களிடம் கூறினள். உடனே எத்தகைய மாபாதகத்திற்கும் பின்னிடையாத அத்துஷ்டர்கள், இப்போது அக்கன்னிகையிடமுள்ள எல்லா வஸ்துக்களையும் பறித்துக் கொள்வதற்குத் தகுதியான மார்க்கம் எதுவென்று ஆலோசிக்கத் தொடங்கினர்கள்.

கொலையாளியாகிய தானப்பன் "நீலாள் மிக்க சாமர்த்தியத்தோடு கஷ்டபட்டுத் தந்திரமாய் அக்கன்னிகையை யிங்கு அழைத்து வந்தாளாதலால் அவளுடைய அபிப்பிராயத்தையே முன்பு அறியவேண்டும்" என்ருன்.

நீலாள் சற்றுநேரம் சிந்தித்து "எனக்கு இதுவிஷயத்தில் ஒன்றுமே புலப்படவில்லை. இங்குவந்து சற்றுநேரம் அவளிடம் நெருங்கிப்பேசியதில் அவள் இன்னும் ஒரு விஷயமும் அறியாதவளாதலால் தீய வழிகளுக்கு கொஞ்சத்தில் இணங்கமாட்டாள். அதோடு நாம் பலவந்தமாய் அவளைக் கொஞ்சகாலம் இங்கு வைக்கலாமென்ருலோ அவள் பெருங் கோஷ்டமிட்டு அண்டை அயலாருக்குச் சங்கதி தெரியும்படி செய்து விடுவாள். என்வரையில் அவளிடமுள்ள பொருள்களை யெவ்விதத்திலேனும் கைக்கொள்ள வேண்டியதே யென்று தீர்மானித்துக் கொண்டேன். இவ்வளவு கஷ்டமெடுத்துக்கொண்டு ஆளை யிங்கு கொண்டுவந்து விட்டபின் அகப்பட்ட வேட்டையைக் கைநழுவ விடுவதென்ருல்

அதைவிட மூடத்தனம் வேறென்ன விருக்ிறது. இவ்வளவே என் அபிப்பிராயம்'' என்ருள்.

முதலில் அக்கன்னிகையிடம் சென்றிருந்து வந்தமாது நீலாளை நோக்கி "நீலா! ஆயினும் உன்மனதில் எதுவோ ஒரு இரகசிய அபிப்பிராயம் இருக்கவே யிருக்கிறதென்று நான் நிச்சயமாய்க் கூறுவேன்'' என்ருள்.

அப்போது ஜாலக்காரன் "அவ்வாறே யென் மனதிலும் ஒருயோசனை யிருக்கிறது. இத்தகைய சமயத்தில் நானுயிருந்தால் என்ன செய்யவேண்டுமென்பதை நான் அறிவேன்'' என்ருன்.

தானப்பன்:—''நீயாயிருந்தால் என்ன செய்வாய் அதை வெளிப்படையா யறிவித்தால் தானே உன் அபிப்பிராயம் இன்னதென்று தெரியும்'' என்ருன்.

ஜாலக்காரன் உடனே இதோ இப்படித்தான் செய்வேன் என்று தன் காத்தின் ஒரு விரலைத் தன் தொண்டைமேல் வைத்து முன்னும் பின்னுமாய் இழுத்துக்காட்டிப் பின்பு, அல்லது என்று கூறிவிட்டு மறுபடி ஒருகையால் தொண்டையை யழுத்திப் பிடிப்பவன்போல் சமிக்கையாய்க் காட்டினுன். அவன் அவ்வாறு காட்டிய சமிக்கைகள் என்னவெனில் கத்தியால் கழுத்தை யறுத்துவிடவேண்டும். அல்லது தொண்டையை யிறுக்கிப்பிடித்துக் கொன்றுவிடவேண்டுமென்பதே.

யாவும் பேசாமல் கேட்டுக்கொண்டிருந்த சாணைக்காரன் அச்சமயம் சட்டென்று துள்ளியெழுந்து நின்ருன். உடனே மற்ற அனைவரும் சந்தேகத்தோடு அவனை யுற்று நோக்கினர்கள். அதற்குள் அவன் சட்டென்று "பேஷ் அப்படியேதான் நானும் செய்வேன்'' என்று கூறிக்

கொண்டே மறுபடி ஆசனத்தில் அமர்ந்தான். அவன் பார்த்த பார்வையால் அவர்கள் அய்யம் நீங்கி "ஓகோ திடீலென் றுண்டான யோசனையாலேயே அவன் அவ்வாறு துள்ளி யெழுந்தான்" என்று கருதினார்கள். தானப்பன் அவன் என்ன கருத்துதான் கொண்டிருக்கிறான் பார்ப்போமென்று,

"நீ மட்டும் என்ன செய்வாய் என்று கூறுகிறாய்?" என்றான்.

சுந்தரம்:—ஏன்? மடையரைப்போல் கையில் அகப்பட்ட பொருளை யிழந்துவிடுவதை விட்டு முன்பின் பாராமல் உடனே ஆளைச் சரிப்படுத்திவிடுவேன். அவ்வளவென்ன? நீங்கள் முன்பின் பார்ப்பதாயின் நான்.......

தான:—நீயே செய்துவிடுவாயோ?

சுந்த:—சந்தேகமென்ன?

தான:—அப்படியானால் கைகொடு. நான் முதலில் உன்னைப் பற்றி சற்று சந்தேகம் கொண்டுவிட்டேன். நீ அதிசயமானவிதமாய்த் துள்ளி யெழுந்தாய்.

சுந்த:—"நான் அப்படிப்பட்ட ஆசாமியல்ல. உண்மையென்ன வெனில் நீங்களெல்லாம் இதைப்பற்றி பிரமாதமாய் யோஜனை செய்துகொண் டிருப்பது எனக்கு வெறுப்பாயிருந்தது. இத்தனைக்கும் எல்லார் மனதிலும் அதே யோசனை யிருந்தும்" என்றான்.

நீலாள்:—"அதே யோஜனை யென் மனதிலிருந்தது உண்மையே" யென்றாள்.

ஜாலக்காரன் அவளை நோக்கி "இது ஒன்றுதான் தகுதியான ஏற்பாடென்று உனக்குத் தெரியும் அல்லவா?" என்றான்.

நீலாள்:—"உண்மையே எனக்கு அது தெரிந்ததே. அப் பெண், ஒன்றும் தெரியாதவள், அவளை நமது வழிக் குக் கொண்டுவருவதென்றால் ஒருவாரத்திலல்ல ஒரு மாதத்தில்கூட என்னால் முடியாது. இதற்கிடையில் இரவும் பகலும் யார் அவளுக்குக் காவல் காப்பது? அதைவிட்டு அவளிடமுள்ள யாவற்றையும் பறித்துக் கொண்டு அவளை வெளியில் அனுப்பிவிட்டாலோ, நாளைக்கே நடந்த சங்கதியைப் போலீஸாரிடம் கூறி விடுவாள் பிறகு கழுத்துகளுக்கெல்லாம் கயிறு வந்து விடும்" என்றாள்.

குடைக்காரகிட்டு "இதைப்பற்றி என்யோசனையி லிருப் பதும் அதுவே" என்றான். பிச்சைக்காரனும் "அவ்வளவே சங்கதி வீண்யோசனைகள் என்?" என்றான்.

கோபாலு:—"யாவரும் இந்த அபாயகரத்தில் சிக்குவ தாயின் யாவரும் இதில் சமபாகமாய்ப் போகவேண்டி யதே" என்றான்.

நீலாள் "மெதுவாய்ப் பேசுங்கள்" என்று சற்று அதி கார தோரணையாய் "இதில் மற்றபேரைவிட சற்று அதிக மான பாகம் பெறவேண்டியவர்கள் இருவர் இருக்கிறார்கள். ஒன்று நானே. இன்னொரு ஆள் யாரெனில், இப்போது இதில் நடக்கவேண்டிய முடிவான வேலையை யார் செய் கிறார்களோ அந்த ஆளே; அவர்கள் யாராயினும் சரி" என் றாள்.

தான:— "ஆம் யாவும் நியாயமாகவும் சரியாகவுமே நடை பெறவேண்டும்" என்றான்.

பக்கிரி பொன்னன் "ஆம் இதே சரி" என்று கூறி விட்டு குடிவெறியால் கனைத்துக்கொண்டு தள்ளாடிக்

கொண்டே யெழுந்து "நானே இவ்வேலையை முடித்து விடுகிறேன்" என்று அறையின் கதவை நோக்கிச்சென்ருன்.

தானப்பன் உடனே யெழுந்து "சேசே, நீ யிந்த வேலைக்கு இப்போது உதவமாட்டாய்; நீ வீணுய் விவகாரத்தைக் கெடுத்துவிட்டாய்" என்று அவனைப் பிடித்து வந்து மறுபடி நாற்காலியில் உட்காரவைத்தான்.

சாணைக்காரன் சட்டென்று எழுந்து "பேஷ் நீகூறியது சரி. நான் அதை யொப்புக்கொள்கிறேன். தானப்பா! உன் தடியை யெனக்கு இரவலாய்க்கொடு. இரண்டொரு நிமிடங்களில் அப்பெண் வேறு உலகில் விழித்தெழும்படிச் செய்து விடுகிறேன். உன் புண்ணியத்திற்கு இந்த நாயைமட்டும் வாய் திறக்கா திருக்கச்செய்; ஏனெனில் இப்பிராணிகள் வீட்டில் மாணம் நேர்வதை யுணர்ந்தால் சும்மாயிராமல் பெருங்கோஷ்டம் செய்யும்" என்ருன்.

தானப்பன் தன் குட்டையான கணுக்கள் நிறைந்த தடியை யவனிடமளித்து "இந்த நாயைப்பற்றி நாங்கள் ஜாக்கிரதை யெடுத்துக் கொள்கிரேம். இந்தா இன்னும் கொஞ்சம் சாராயம் எடுத்துக்கொண்டு உன்வேலையை சீக்கிரம் நிறைவேற்றி விடு. இத்தகைய வேலை சற்று ஆலசியம் செய்தாலும் கெட்டுப்போய்விடும்" என்ருன். நீலாள் மனம் மட்டும் சற்றேனும் ஈவிரக்கமில்லாத கற்பாறை போன்றது. மற்ற மாதரெல்லாம் தாழ்ந்த குரலோடும் மன நடுக்கத்தோடும் "ஆம் ஆம் ஆலசியம் செய்தால் பிறகு சற்றும் பயனில்லாமற் போய்விடும்" என்று கூறினர்கள்.

சாணைக்காரன் தானப்பன் கிண்ணத்தில் ஊற்றி யளித்த பானத்தை யருந்திவிட்டு கொலைக்கஞ்சாத பார்வையோடும் துணிகாத்தோடும் தடியைக் காத்தில் பிடித்துக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டான். அதற்குள் அவன்

மனதில் ஒரு யோஜனை யுதிக்க, உடனே “நீங்கள் இந்த தீபத்தைச் சற்றுநேரம் என்னிடம் கொடுக்கவேண்டும்” என்று கூறிக்கொண்டே அந்த அறையிலிருந்த ஒரே தீபத்தைக் கையில் எடுத்துக்கொண்டான்.

அதைக்கண்ட மாதர்களில் சற்று வாலிபமானவள், உடனே திகிலால் முகம் வெளுத்து “அய்யோ! எங்களையிருட்டில் இருக்கச் செய்துவிடாதே” என்றுள்.

நீலாள் அம்மாதைச் சிவங்கிபோல் கோபப்பார்வையாய்ப் பார்த்து “சே சே கோழை, முட்டாள்” என்று கூறிவிட்டு, பிறகு சாணேக்காரனை நோக்கி, “இந்த விளக்கையெடுத்துக்கொண்டு போகவேண்டிய அவசியமேயில்லை. ஏனெனில் நான் அவள் இருக்கும் அறையில் ஒரு மெழுகுவர்த்தியை எரிந்துக்கொண்டிருக்க வைத்துவிட்டே வந்திருக்கிறேன்” என்றுள்.

சுந்தரம்:—“ஓ! அப்படியாயின் மிக்க நல்லதாயிற்று. நான் திரும்பிவருமட்டும் யாரும் சந்தடிசெய்யாமல் இதைவிட்டு நகராமலிருங்கள். நான் அதிகநேரம் ஆலசியம் செய்யமாட்டேன்” என்று கூறிவிட்டு அந்த அறையின் கதவை மூடிக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டான்.

# 26 - வது அத்தியாயம்.

இருட்டறையை விட்டுப் புறப்பட்ட சாணக்கார சுந்தரம் பூனைபோல் மிக்க ஜாக்கிரதையோடு காலடிச் சத்தம் கேளாதபடி மெதுவாய் நடந்து அக்கன்னிகை யிருக்கும் அறைக்குச் சென்றான். அந்த அறையின் கதவிற்கு உள்ளாவது வெளியிலாவது தாட்பாளில்லை. சுந்தரம் மெது வாய்க் கதவைத் திறந்து உள்ளே சென்றான். உள்ளே யொரு சிறு மேஜைமேல் ஒரு மெழுகுவர்த்தி யெரிந்து கொண்டிருந்தது. அங்கிருந்த கன்னிகை ஆயாசமா யிருந்தவளாதலால் தன்னை மறந்து நித்திரைசெய்துகொண் டிருக்கிறாள். சுந்தரம் அவள் உருவத்தை உற்றுப் பார்க்கும் அவ்வளவு அற்பகாலம்கூட ஆலசியம் செய்யவில்லை.

சட்டென்று கதவைமூடி அங்கிருந்த ஒருநாற்காலியை யெடுத்து, யாராவது பலவந்தமாய் உள்ளே வரக்கருதினால் அவர்கள் கதவைத் திறக்க மிக்க பிரயாசைப்படும்படி, அதைக் கதவிற்கு முட்டுக்கொடுத்துவிட்டு துரிதமாய்ச் சாளரத்தைப் போய்த் திறந்தான். அதற்கு ஒரு மாத் தாட்பா ளிருந்ததால் சுலபமா யதைத்திறந்து பார்த்து மறு படி மூடிவிட்டு, படுக்கை யருகிற்சென்று அக்கன்னிகை யின் தோளைப்பிடித்துக் குலுக்கினான். அவள் திடுக்கிட்டு விழித்துக்கொண்டு கண்களைத்திறந்து இவனைக்கண்டதும் துள்ளியெழுந்து உட்கார்ந்து அலறிக் கூச்சலிட வாயைத் திறந்தாள்.

சுந்தரம் சட்டென்று சும்மாயிருவென்று தன் வாய் மேல் கையைவைத்து மூடிக்காட்டி "கடவுளே! சந்தடி செய்யாதே.நான் உன்நண்பனாய் உனக்கு உதவிசெய்ய வந்

தேன், நீ பரம துஷ்டர்களிடத்தில் சிக்கிக்கொண்டு பெரிய ஆபத்திலிருக்கிறுய்; ஆகையால் ஒருவினடிகூட ஆலசியம் செய்யாமல் இதைவிட்டுத் தப்பித்துக்கொண்டு போய்விட வேண்டும்'' என்ருன்.

அக்கன்னிகை யின்னும் திப்பிரமை யடைந்தவள் போல் அவனைக்கண்டு மிரள மிரள விழித்தாள். சுந்தரம், "அய்யோ ஆலசியம் செய்யாதே. இந்தா உன்கெடியாரம் முதலியவற்றை யெடுத்துக்கொள்'' என்று அவளை வேண்டிக் கொள்வதுபோல் கூறினன்.

அப்போதுதான் அவளுக்கு "ஓகோ நாம் உண்மையாகவே யேதோ ஆபத்தில் சிக்கிக்கொண் டிருக்கிறேம் உடனே சுறுசுறுப்பாய் முயலவேண்டியது அவசியமே'' என்று மனதில் தெளிவாய்த் தோன்றியது.

உடனே திகிலோடும் நடுக்கத்தோடும் தன்கெடியாரம் பணப்பை முதலியவற்றை யெடுத்து மடியில் வைத்துக் கொண்டு மேல்போர்வையை யெடுத்து போர்த்திக்கொண்டு புறப்பட ஆயத்தமானுள். சுந்தரம் உடனே மெதுவாய்ச் சாளரதத்தைத் திறந்து அவளை அவ்வழியாய் வீதியில் இறக்கிவிட்டு அவள் துரிதமாய் கொஞ்ச தூரம் ஓடுவதைப் பார்த்தபின் தானும் அதே வழியாய்த் தப்பித்துக் கொண்டு போய்விட அடியெடுத்து வைத்தான்.

அதே வினடி அந்த அறையை நோக்கி ஆட்கள் தப தபவென்று வரும் காலடிச் சத்தங் கேட்டதும் மறு வினடி தடாலென்று கதவு தெக்கித் திறந்துவிடப்பட்டது. சுந்தரம் உடனே சாளரத்தின் வழியாய் வீதியில் பாய்ந்துக் குதித்தான். ஆனல் கெட்ட காலத்தின் பயனுய்க் காலிடறிக் குப்புற விழுந்து, சிரசில் அடிப்பட்டதால் தட்சணம் ஸ்மாணையிழந்து மூர்ச்சை யடைந்தான்.

தானப்பன் அவன் பின்னாலேயே குதித்து கீழே யிருந் தவனை யெழுந்திருக்க விடாதபடிக் கெட்டியாயமுத்திப் பிடித்துக் கொண்டு குனிந்து யவன் முகத்தை யுற்று நோக் கத்தொடங்கினன். அதே நிமிடம் நீலாளும் இன்னும் இரண்டு மூன்று பேரும் கன்னிகை யோடிவிட்டதை யறிந்து கொண்டதால் உடனே துரிதமாயோடி தெருக் கத வைத் திறந்து அவனைத் துறத்திக் கொண்டு சென்றார்கள்.

அக்கொலைபாதகருடைய விடத்தை விட்டுத் தப்பித்துக் கொண்ட கன்னிகை பிராண பயத்தால் திடீலென்று இறக் கைகள் பெற்றவள்போல் அதி வேகமா யோடினள். பின் னால் ஆட்கள் துறத்திவரும் சத்தம் அவள் செவிகளில் கேட் டது. ஆனல் திகிலால் அவளால் வாய் திறந்துக் கூச்ச லிட முடியவில்லை. அந்தோ அக்கிரமமாய் ஆபத்தில் சிக்கிக் கொண்ட உத்தமர்களைக் காப்பாற்ற சர்வக்ஞனுகிய கருணை நிதியொருவனுண்டோ இல்லையோ. அவனருளினல் ஆற் றோரத்திலிருந்த ஒரு தொழிற் சாலையில் வேலைசெய்யும் சில ஆட்கள் ஒரு அவசர வேலையால் அந்த வேளையில் தொழிற் சாலைக்குப் போக அவ்வழியே வந்துகொண் டிருந்தார்கள்.

அப்போது உதயகாலம் நெருங்கிவிட்டது. கன்னிகை அந்த ஆட்களைக்கண்டதே அவர்கள் நாணயமான தொழி லாளிகள் என்று தெரிந்துகொண்டு அவர்களிடம் அடைக் கலம் புகுந்தாள். நீலாளும் அவள் கூடவந்த துஷ்டர்களும் விஷயம் இப்படித் தங்களுக்குப் பிரதிகூலமாய் மாறியதைக் கண்டதும் துரிதமாய் இருட்டறைக்குத் திரும்பி விட்டார் கள்.

இதற்கிடையில் தானப்பனும் பக்கிரி பொன்னனும் ஸ்மாணையற்றிருக்கும் சாணைக்காரனை வீட்டிற்குள் தூக்கிக்

கொண்டு போய்விட்டார்கள். உடனே திறக்கப்பட்டிருந்த சாளரம் மூடப்பட்டது. தெருக்கதவும் தாளிடப்பட்டது. வீடு பரமயோக்கியர்களுடைய வாசஸ்தலம்போல் நிர்ச் சந்தடியாய் விட்டது.

கன்னிகை தான் வழிதப்பி அத்துஷ்டரிடம் சிக்கிக் கொண்டதையும், பிறகு ஒரு ஆள் தன் ஆபத்தான நிலைமையைத் தெரிவித்து தன்னைக் காப்பாற்றியதையும், அம்மனிதன் தன் பின்னால் தானும் தப்பித்துக்கொண்டு வந்துவிட முயன்றபோது கால் இடறிவிழுந்து அக்கள்ளரிடம் சிக்கிக் கொண்டதையும் அவனை யத் துஷ்டர்கள் அவ்வீட்டிற்குள் தூக்கிக் கொண்டுபோய் விட்டதையும் யாவும் சுருக்கமாய்க் கூறினாள்.

அந்த வேலையாட்கள் அவள்மேல் பரிதாபம் கொண்டார்கள். ஆனால் ஜாடித்தீவில் வசிப்பவர்கள் இத்தகையோர்களென்றும் அவர்களுடைய நடக்கைகளும் யாவும் அந்த ஆட்களுக்குத் தெரியும். ஆகையால் அவர்கள் விஷயத்தில் பிரவேசிப்பது வீணாய் ஆபத்திற்கிட முண்டாகுமே யொழிய சற்றும் பயனளிக்காதென்று அவர்களுக்குத் தெரியும். ஆகையால் அவர்கள் இரண்டு ஆட்களைக்கூட்டி அக்கன்னிகையை மட்டும் ஒரு மரியாதையான விடத்திற்குக் கொண்டு போய் தக்க ஏற்பாடு செய்யும்படி யனுப்பிவிட்டு மற்றபேர் தங்கள் தொழிலுக்குச் சென்றார்கள்.

இதற்கிடையில் நமது சாணைக்காரன் கதி யென்னாயிற்று பார்ப்போம். அத்துஷ்டர்கள் அவனை வீட்டின் பின் பக்கமுள்ள அந்த இருட்டறைக்குக் கொண்டுபோய், அவன் தலையில்பட்ட அடியின் அதிர்ச்சியால் இன்னும் ஸ்மாரணையின்றியே யிருந்ததால் அவனைத் தரையில் கிடத்திவிட்டு உடனே மிக்க அவசரத்தோடு இனி யென்செய்வதென்று

ஆலோசனை செய்யத்தொடங்கினர்கள். அவன் நடந்து கொண்ட மாதிரியால் அவன் ஒரு துரோகியாகவே யிருக்க வேண்டும். இன்றேல் மிக்க கோழையாக விருக்கவேண்டும் என்று தெரிகிறது. ஆகையால் இரண்டில் ஒன்று எப்படி யிருந்தாலும் அவனால் ஆபத்தேநேரும் என்று அவர்களுக் குப் புலப்பட்டது. அப்பெண்ணை யவர்கள் கொல்ல எண்ணி யதை யவன் தெரிந்துகொண் டிருப்பது ஒருபக்கம் இருந்த போதிலும், அவர்களுடைய ஏற்பாடுகளும் தொழில்களும், நடவடிக்கைகளும், ஆசாமிகளும், வாசஸ்தலம் முதலியவை களும் அவனுக்குப் போதுமானவரை தெரிந்துவிட்டிருக் கிறவரையில் அவன் கருதினல் தங்களை யுடனே கைதுசெய் யக்கூடும் என்பதோடு யாவரையும் தீபாந்தர சிட்சையடை யும்படி செய்துவிடலாகுமென்பதை அவர்கள் நன்குணர்ந் தார்கள். அத்தகைய துஷ்டர்கள் தங்கள் ஆபத்தை யுண் டாக்கக்கூடிய அத்தகைய ஆள் தங்களிடம் சிக்கிக்கொண் டிருக்கிறவரையில், அவனை யொழித்துவிடத் தீர்மானிப்ப தில் சற்றேனும் முன்பின் யோசிப்பார்களோ? ஒரு காலு மில்லை. ஆகையால் அவனை அடியோடு பைசல்செய்து விடு வதே காரியம் என்று உடனே தீர்மானித்துக் கொண்டார் கள். அதிலும் அவன் ஸ்மாரணைதப்பிக் கிடக்கும் அத்தகைய சமயத்தில் அது சுலபமாய்ச் செய்துவிடக்கூடிய காரியம். ஒருவித கஷ்டமாவது சந்தடியாவது இல்லாமல் செய்துவிட லாமன்றோ. ஆகையால் சற்றும் தடுமாற்றமின்றி சந்தோஷத் தோடு அவ்விதமே தீர்மானித்துவிட்டார்கள்.

யாவரும் இந்த ஏற்பாட்டிற்குச் சம்மதித்துக்கொண்ட தால், அக் கொலை பாதகர்கள் உடனே தங்கள் வேலையை முடித்துவிடத் தொடங்கினர்கள். அந்த வீட்டின் பின்புறம் மேல்மாடி அகழியின்மேல் முன்னேக்கிச் சென்றிருக்கிறது.

மேல்மாடியின் கைப்பிடிச் சுவரின்கீழ் ஆழ்ந்து கறுத்த அகழியே யிருக்கிறது. அச்சண்டாளர்கள் சற்றும் ஸ்மாணையின்றி யிருக்கும் நமது சாணக்கார சுந்தரத்தின் தேகத்தை அந்தக் கைப்பிடிச் சுவரின்மேல்வைத்து அகழியில் உருட்டிவிட்டார்கள்.

அச்சமயம் ஜாடித்தீவு முழுமையும் நிர்ச்சந்தடியா யிருக்கிறது. பொழுதோ விடியும் சமயம். அத்தேகம் சளால் என்று அந்த ஆபாச சேற்றுச் சலத்தில் விழுந்ததைக் கேட்டதும் அச்சண்டாளர்கள் கையில் கொண்டுவந்த தீபத்தை யணைத்துவிட்டு சாளரக் கதவையும் மூடிக்கொண்டு உள்ளே போய்விட்டார்கள்.

அதே நிமிடம் முன்னே யிருந்த ஒரு தொழிற்சாலைக்காரர் கால்வாயில் அதிக ஜலம் ஏறிவிட்டதைக் கண்டு அணைக்கட்டைத் திறந்துவிடத் திடீலென்று பரிசுத்தமான ஆற்று ஜலம் வேகமாய் அகழியில் பாய்ந்தது. அந்தஜலம் அதிவேகமாய் அசுத்தமான அகழிச்சேற்றின்மேல் அலைமோதிக் கொண்டு புரண்டோடியது. கள்ளர்களனைவரும் தங்கள் வேலை முடிந்ததென்று சந்தோஷத்தோடு இருட்டறைக்குள் வந்து சாராயம் குடிக்கத் தொடங்கினுர்கள்.

*　　*　　*　　*

*　　*　　*　　*

இரவிலும் முக்கால் இரவு சந்தடியோடிருந்த இரத்தினபுரி நகரம் கிழக்கு வெளுக்கத் தொடங்கியதே கொஞ்சம் கொஞ்சமாய் விழிப்பிற்கு வாத் தொடங்கியது. அதிகாலையில் எழுந்து தங்கள் தொழிலுக்குச் செல்லவேண்டிய ஏழைகளெல்லாம் வெளியில் புறப்படத் தொடங்கினுர்கள்.

அத்தகைய அதிகாலை வேளையிலேயே கப்பல் வீதியிலிருந்த நாவிதன் கடைமட்டும் திறக்கப்பட்டிருந்தது. அவ்

வீதி மிக்க ஏழைகளாகிய அயோக்கியர்கள் நிறைந்துள்ள விடம். நாள்முழுதும் ஆண்களும் பெண்களுமாகிய சிறுவர்கள் சிறுமிகள் சாலைகளிலும் குப்பைமேடுகளிலும், உதவாதென்று எறியப்பட்டிருக்கும் பண்டங்களைப் பொருக்கிக் கொண்டிருப்பதைக் காணலாம். அவ்வீதியிலுள்ள அசுத்தமோ சொல்லிமுடியாது.

நண்பர்களே! அத்தகைய வீதியில் அவ்வளவு காலையில் திறக்கப்பட்டிருக்கும் க்ஷவரகன் கடை யெது வென்று கருதுகிறீகள்? துரைத்தனக் கொலையாளியாகிய நமது தானப்பன் கடையே.

அவன் சிறுவனாக விருக்கையில் ஒரு க்ஷவரகன் கடையில் பழகியவனாதலால் தன் கொலையாளி தொழிலோடு அத்தொழிலையும் வைத்துக் கொண்டான். அதற்கு வேறு காரணங்களுமுண்டு. கொலைத் தீர்ப்பு பெற்றவர்களெல்லாம் வைக்கப் படுவதும் தூக்கிற் போடப் படுவதுமாகிய சிறைச்சாலை யருகிலிருப்பதே அவன் அவ்வீதியில் வசிப்பதற்குக் காரணம். அவன் கொலைத்தொழில் யாவராலும் வெறுக்கப் பட்டதும் தூழிக்கப்பட்டதுமான வேலை. அந்நாட்டில் கொலையாளி யொருவனைப் பகிரங்கமாய்த் தூக்கிற் போடும் போது அவன் முகமூடி யணிந்துகொண்டிருப்பது வழக்கம். ஆகையால், இன்னவன்றான் அத்தொழில் புரிகின்றான் என்பது அனேகர்க்குத் தெரியாது. தானப்பன் கொலைத் தொழிலைச் செய்த அப்பியாசத்தால் சற்று நவீசக்க மில்லாதவனாய் எல்லாவித அக்கிரமங்களையும் செய்யத் துணிந்து விட்டான். கள்ளக் கூட்டத்தோடு சேர்ந்து கொண்டு அவன் செய்யும் களவு கொலை முதலிய பாதகச் செயல்களால் அதிக பணம் அவனுக்குக் கிடைத்தது. அதைக்கொண்டு அவன் தன் அக்கிரமங்கள் வெளிவாராம லிருப்பதற்காகவும்

ஜனங்கள் தன் கொலைத்தொழிலுக்காக தன்னை யதிகமாய் வெறுக்காமலும், கேலி, தூஷணை, அலட்சியம் முதலியவை செய்யாதிருக்கவும் வேண்டியதற்காக அற்ப தருமங்களைச் செய்வதும், ஏழைகளுக்குக் கொஞ்சம் உதவி புரிவதுமா யிருந்தான். இதற்காகவே குறைந்த கூலிக்கும் மயிர் கழித்து வந்தான். இதனால் அவ்வீதியி லிருந்த ஏழைக ளுக்கு மிக்க உபகாரமாயிருந்ததால் அவர்களெல்லாம் அவன் மிக்க நல்ல யோக்கியனென்றும் தருமிஷ்டனென் றும், பரோபகாரியென்றும் கூறுவதுண்டு. அவனும் அதற் காகவே அவ்வாறு நடந்து வந்தான்.

அச்சமயம் அங்கிருந்த கொடுங்கோல் மன்னனுடைய ஆளுகையில் பிரதி வாரமும் ஆறு முதல் பனிரெண்டுபேர் வரையில் மரண தண்டனை யடைந்து வந்ததால் அதிலும் தானப்பனுக்கு நல்ல வருமானமே கிடைத்து வந்தது.

தானப்பன் தான் வசித்துவந்த வீடு முழுமையும் வாட கைக்கு எடுத்துக்கொண் டிருந்தான். அவன் மனைவி சில வருடங்களுக்கு முன் இறந்துபோய்விட்டாள். அவள் இவனுடைய குரூரச் செய்கையாலேயே மடிந்தாள் என்று பெரும்பாலர் கூறிக்கொள்வதுண்டு. தற்சமயம் அவன் வீட் டிலிருப்பவர்கள், அவன் வீட்டுக் காரியஸ்தியாகவும் அவனு டைய அபிமான ஸ்திரீயாகவும் இருந்த ஒரு மாதும், அவ னோடு உதவியாய் சுஷவா வேலை செய்துகொண்டிருந்த இரண்டு வாலிபர்களுமே.

அந்த இருவரில் மூத்தவன் அம்மாதின் சகோதரனு கும். அவனே மூத்தவன். அவன் வயது இருபத்தேழு. அம்மாது அவனுக்கு இரண்டு வருடங்கள் இளையவள். அண்ணன் பெயர் இராசப்பன். தங்கை பெயர் காமாட்சி அல்லது காமு. மற்றொரு வாலி⁄ ன் பத்தொன்பது வயது

டையவன். அவன் பெயர் ஜனகன். சாதாரணமாய் அவன் அனுதையென்று கூறப்படுபவன். அவன் புத்திக்குத் தெரிந்தமட்டில் தனக்குத் தாய்தந்தையார் யாரென்ருவது தனக்கு வேறுபெயர் உண்டென்ருவது அவன் அறியான். அவன் குழந்தைப் பருவத்திலிருந்தே இராசப்பன் காமாட்சி இவர்களுடன் வளர்ந்தவன். இப்போது நாம் கூறிக்கொண்டு வரும் சம்பவங்கள் நடக்க ஏழெட்டு வருடங்களிருக்கும் போது தானப்பன் இவர்கள் மூவரையும் சிறுவர்களும் வாலிபர்களுமாகிய கள்ளர்கள் வசிக்கும் ஒருவிடத்தில் கண்டு அப்போதுதான் அவன் மனைவி பிறந்துபோயிருக்கதால், காமாட்சிமேல் பிரியங்கொண்டு தன்கூட வந்து வசிக்கும்படி யவளை யழைத்தான். அவள் தன் தமயனையும் தங்களோடுகூட வளர்ந்த ஜனகனையும் விட்டுப் பிரியமாட்டேனென்ருள். ஆகையால் தானப்பன் அவர்கள் மூவர்களையும் தன் வீட்டிற்குள் அழைத்துக்கொண்டான். அவ்வாலிபர்கள் இருவரும் தங்கள் சிறுவயது முதல் ஏற்பட்ட சகவாசப் பழக்கத்தால் யோக்கியதை மானம் முதலிய உயர் குணங்களை யுணாாதவர்களாய் விட்டார்கள். ஆகையால் தாங்கள் சகோதரியாய்க் கருதியிருக்கும் காமாட்சி அக் கொலையாளியின் வைப்பாட்டியாயிருப்பது மானக்குறைவாய் அவர்களுக்குத் தோன்றவில்லை.

காமாட்சி சற்று குட்டையாய் மெலிந்த தேகமுடையவளாய் இருந்தாள். இளவயதிலேயே துர் நடக்கைகளில் பிரவேசித்து விட்டதால் அவள் முகம் வெளுத்து வாடியிருந்தது. அவள் தேக அமைப்பிற்கு அவள் மட்டும் சரியான வழியில் நடந்து கொண்டிருந்தால் கூடியவரையில் அழகுடையவளாகவே யிருந்திருப்பாள். ஆயினும், அவள் கூந்தல் பற்கள், அதரங்கள் மற்ற அவயவங்கள் இவைகளின்

அமைப்பால் அவள் இயற்கையழகுடையவளென்றே யாவரும் கருதுவார்கள். அவள் தமையனும் அவளைப் போலவே மெலிந்ததேகமுடையவனாகவும் அழகுடையவனாகவுமேயிருந்தான். அவனும் துர்நடக்கைகளினால் வெளுத்த முகமுடையவனாகவே யிருந்தான்.

ஜனகன் மிக்க அழகுடையவன். உயரமும் நல்ல தேகக்கட்டும் ஒருவிதக் கம்பீரமான தோற்றமும் உடையவன். அவன் முகத்தில் ஒருவிதப் பெருமையான தோற்றமிருந்தது. ஆனால், அவனும் சகவாச தோஷத்தால் மேற்கண்ட உயர்ந்த தோற்றங்களை யெல்லாம் பிரகாசிக்க வொட்டாது செய்துக்கொண்டான். அவன் மட்டும் சரியான வழியில் வளர்க்கப்பட்டிருப்பானேல், அவனைக் காண்போர் அவன் உயர்குடியில் மேலான அந்தஸ்தை யுடைய தாய் தந்தையர்க்கே ஜனித்தவனாக விருப்பான் என்றே கருதுவார்கள்.

தானப்பன் வீட்டின் முதல் அறை சிறியதாயினும் கூடியவரையில் சுத்தமாகவே அலங்கரிக்கப்பட் டிருந்தது. அங்கு மேஜை, இரண்டு நாற்காலிகள், ஒரு பெரிய நிலைக் கண்ணாடி, நீருள்ள ஒரு பெரிய பாத்திரம், சோப் முதலிய க்ஷவரம் செய்வதற்கு வேண்டிய சாமான்களும் இருந்தன. வரும் கிராக்கிகள் உட்காருவதற்காகப் பின்னால் இருந்த ஒரு அறையில் மூன்று நான்கு நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. இப்போது தானப்பன் வீடு கடை ஆட்கள் முதலிய விவரத்தைப் பற்றி ஒருவாறு கூறி முடித்தோம். இனி கதையைத் தொடங்குவோம்.

## 27-வது அத்தியாயம்.

முன் அத்தியாயத்தில் கூறப்பட்ட சம்பவங்கள் நடந்த மறுநாட்காலை ஏழுமணிக்குத் தானப்ப னுடைய க்ஷவரக்கடை திறக்கப்பட்டிருக்கிறது. காமாட்சி வீட்டைச் சுத்திசெய்துவிட்டு காலைப்போஜனம் ஆயத்தம் செய்யச்சென்ருள். வாலிபர்கள் கடையைத் திறந்துவைத்து கிராக்கிகள் வந்தால் வேலேசெய்ய ஆயத்தமா யிருக்கவேண் டிய யாவும் கொண்டுவந்து வைத்தார்கள்.

இவை யாவும் முடிந்தபோது முதலாளியாகிய தானப் பன் கடைக்குள் வந்தான். அவன் இரவு முழுமையும் உடைகளைக் கழற்றவுமில்லை; ஒரு விநாடியேனும் கண் உறங் கவுமில்லை. பொழுது விடிந்த பின் ஆறுமணிக்குப் பின்பே அவன் ஜாடித் தீவிலிருந்து வீடு வந்து சேர்ந்தான். அவன் மனம் நிம்மதி அல்லது திருப்திகரமான நிலைமையில் இல்லை; ஆகையால், வாலிபர்கள் மேல் வீண் குற்றம் சுமத் தவும் கடிந்து கொள்ளவும் தொடங்கினுன். ஜனகன் அவன் பேச்சுக்கு ஒருபோதும் இடங் கொடாமல் மறுத்துப் பேசு வது வழக்கம். சற்று நேரம் அவ்வாறு பேசிய பின் தானப் பன் "கிடக்கட்டும். நமக்குக் கிராக்கிகள்வரும் சமயமாய் விட்டது. நாம் சச்சரவு படுவது சரியல்ல" என்று கூறி சமாதானம் செய்துக் கொண்டான்.

அந்த அறையில், தீபாந்தரவாச தண்டனை மாண தண்டனை யடைந்த பிரக்யாதி பெற்ற கள்ளர்கள் படங்கள் வைக்கப்பட் டிருந்தன. சற்று நேரம் தானப்பன் அவர்களு டைய சாமார்த்தியங்களைப் பற்றிப் புகழ்ந்துகொண்டும் அத்தகைய உத்தம வீரர்களை பாடித்துத் தண்டித்தது மிக்க

வெட்கக் கேடான சங்கதியென்று பிரலாபித்துக் கொண்டும் இருந்தான். சுமார் எட்டு எட்டரை மணிவரையில் மூவர்க்கும் வேலை பூராயிருந்தது. கடைசியில் வேலை முடிந்ததும் வாலிபர்களிருவரும் காலைப் போஜனத்திற்காக உள் அறைக்குச் சென்றார்கள்.

தானப்பன் சற்று காற்று வாங்குவதற்காக வீதியின் பக்கமாயுள்ள வாசற்படியில் போய் நின்றுகொண் டிருந்தான். அங்கு நின்று சற்றுநேரம் இரவு ஜாடித்தீவில் நடந்த சம்பவங்களைப் பற்றி சிந்தித்துக்கொண்டிருந்து கடைசியில் அதை விட்டுத் திரும்பிப் போகும் சமயம் துப்பறிவதிலும் கள்ளரைப் பிடிப்பதிலும் பிரக்யாதி பெற்ற செல்வநாதன் கடையை நோக்கி வருவதைக் கண்டான். குற்றமுள்ள நெஞ்சாதலால் அவனைக்கண்டதே பெருந்திகில் உண்டாயிற்று. ஆயினும் அடுத்த நிமிடம் அடியிற் கண்டவாறு சிந்தனை யவன் மனதிலுதித்தது:—

"இரவு நடந்த சங்கதி இவ்வளவு சீக்கிரம் வெளிகிளம்பி செல்வநாதன் வரையில் எட்டி விட்டிராது. தப்பித்துக் கொண்டுபோன அக்கன்னிகை போலீஸாரிடம் அதைப்பற்றி பிராது செய்திருப்பாளோவென்று பார்த்தாலோ அவள் தன்னை யாரோஒருமாது எங்கோ ஒருவிடத்திற்கு அழைத்துச் சென்றதாகவும். பிறகு அங்கிருந்த யாரோ ஒரு மனிதனே தான் ஆபத்தில் சிக்கிக்கொண்டிருப்பதாய்க் கூறித் தன்னைச் சாளரத்தின் வழியாய்த் தப்பித்துக் கொண்டுபோகச் சொல்லி அவ்வாறே யுதவிசெய்ததாகவும், பிறகு அவனும் அதேவழியாய் அங்கிருந்து வெளிதாண்ட முயன்றபோது தவறி விழுந்துவிட்டதாகவும், அத்துஷ்டர் அவனை வீட்டிற்குள் தூக்கிக்கொண்டு சென்றதாகவும் கூறலாமேயன்றி, எந்த மாது எந்த மனிதர் எந்தவிடம்

முதலிய ஒரு தகவலும் கூறமுடியாது. மேலும் செல்வநாதன் ஏதேனும் கெடுதிசெய்யும் கருத்தோடு வருபவனுயின் இம்மாதிரி தனியாகவும், பொராக்கு பார்த்துக்கொண்டும் வரமாட்டான். ஆகையால் அவனைப்பற்றி நாம் வீணுய் கலவரமடைவது மூடத்தனம்''

இவ்வாறு சிந்தித்துக் கொண்ட தானப்பன் செல்வநாதன் தன் அருகில் வருவதற்குள் குற்ற மற்ற உள்ளமுடையவன் போல் பூரண தைரியமடைந்து நின்று கொண்டிருந்தான்.

செல்வநாதன் மிக்க துணிகாமும் வீரத்தன்மையும் காட்டி மகா அற்புதமான காரியங்களைச் செய்து விடவில்லையெனினும், குற்றவாளியைக் கண்டு பிடிப்பதிலும், மற்ற பேர்களெல்லாம் "சே! இது மிக்க அற்ப விஷயம் என்று அலட்சியமாய்க் கழித்து விடத்தக்க அத்தகைய அற்பசம்பவத்திலிருந்தே குற்றம் நடந்த உளவுகளையெல்லாம் கண்டு பிடிப்பதில் இணையற்ற நிபுணன் என்பதில் சற்றேனும் சந்தேகமேயில்லை. இவ்வாறு சூக்கும புத்தியால் உளவுகளைக் கண்டு பிடிப்பதில் அவனுக் குண்டாயிருந்த சமார்த்தியத்தைப் பற்றி பல அபூர்வக் கதைகள் கூறப்பட்டிருக்கின்றன. அவனுக்கு வயது முப்பத்தைந்து முதல் முப்பத்தெட்டு வருடங்களுக்குள் இருக்கும். அவன் தேக அமைப்பைப் பார்த்தால், கஷ்டமான தொழிலுக்கும், இளைப்பு ஆயாசம் முதலியவைகளுக்கும் ஈடு கொடுக்கத் தகுந்த ஆளாய்ப்புலப்பட்டது. மாறுவேடமணிவதில் மிக்க சாமார்த்தியமுடையவன்.

அவன் தானப்பனுடைய வீட்டின் சமீபத்தில் வரும் போது அதைப்பாராமலே எதிர் வாடையின் ஓரமாகவே ஏதோ சிந்தித்துக்கொண்டு போகிறவன் போல் தானப்ப

னுக்குப் புலப்பட்டதால் அவன் வலிய செல்வநாதனை விளித்து "ஏது இவ்வளவு காலை புறப்பட்டு விட்டது; க்ஷேமந்தானே" என்றான்.

செல்வநாதன் திடுக்கிட்டு அப்போதுதான் தானப்பனுடைய வீட்டருகில் வந்திருக்கிறோமென்று உணர்ந்தவன் போல்,

"ஆ! தானப்பா! நான் உன்னைப் பார்க்கவேயில்லை. உண்மையாய் நாம் இவ்வீதியின்வழியாய் போகிறோமென்கிற உணர்ச்சியே யெனக்கில்லை. ஏனெனில் என் சிந்தனை முழுமையும் சிறைச்சாலையில் உள்ள ஒருவன் தன் கூட்டாளிகளைப்பற்றி கூறிய சில முக்கியமான சமாசாரங்களின் மேலேயே யிருந்தது. அது இரண்டொரு மாதங்களுக்குமுன் ஒரு பெரிய கிராமத்தில் நடந்த கொள்ளையைப் பற்றியது" என்றான்.

அம்மொழிகளைக் கேட்டதே தானப்பனுக்கு செல்வநாயகன் அங்கு வந்ததைப்பற்றி யுண்டான சந்தேகமும் கலவரமும் அடியோடு நீங்கிவிட்டன. அதன்மேல் அவன் உற்சாகத்தோடு, "பேஷ் நீ யெப்போதும் சுறுசுறுப்போடேயே உன்வேலையைக் கவனித்துக்கொண் டிருக்கிறாய்" என்றான்.

செல்வநாதன்:—"ஆம். என்செய்வது, என்வேலையின் சுபாவத்திற்கு அடிக்கடி யப்படி நடந்து கொள்ளவேண்டியதாய் நேரிடுகிறது. ஆயினும் இப்போதிருப்பதுபோல் வேலை யிவ்வளவு ஜப்பாய் எப்போதும் இருந்ததேயில்லை..." என்றான்.

தானு:— ஓ அப்படியா! விஷயங்கள் அதிகமாய் இல்லையோ?

86539

# மாதவி மாதவன் அல்லது

## ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

(2-பாகம்.)

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

# அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

# இராஜாமணி

அல்லது

## ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு மூடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம்அவரை யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி பிள்ளை: மணந்துகொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியனவாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

# “ஆனந்தபோதினி”

**ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.**

இச்சஞ்சிகை 1915ஆு ஜுலைமீ முதல் சென்னையில் பிரசுரி
கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்
பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலெ
கீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்
ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே
இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும்
மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும்,
ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம்.
எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால்
வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி
முதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்
களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்
போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச்
சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது
ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீ
யும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மை
யொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்
கம் அளவில் 64 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்
கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.
பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0
மாதிரிக்காப்பி இனாம்.

**ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி இரகசியம் | ரூ. | அ. | தினகரசுந்தரி | ரூபா 1 | 0 |
| 2-பாகமும் ... | 4 | 0 | தபால்கொள்ளைக்காரர் | 0 | 14 |
| பவளத்தீவு 2-பாகமும் ... | 3 | 0 | ரத்தினபாய் ... | 1 | 12 |
| கற்கோட்டை ... | 2 | 0 | வீரநாதன் ... | 0 | 12 |
| மின்சார மாயவன் ... | 1 | 8 | குணசுந்தரன் ... | 0 | 12 |
| தேவசுந்தரி ... | 1 | 4 | மஞ்சள் அறையின் மர்மம் | 1 | 8 |
| கனகபூஷணம் 2 பாகம் ... | 3 | 8 | கமலசேகரன் ... | 1 | 12 |
| இராஜாமணி ... | 2 | 0 | பூங்கோதை ... | 0 | 10 |
| ஆனந்தசிங் ... | 2 | 0 | இந்திராபாய் ... | 2 | 8 |
| மதனபூஷணம் ... | 1 | 0 | அமராவதி 2 பாகமும் | 4 | 0 |
| ஞானசெல்வாம்பாள் | | | மதனாம்பாள் 2 பாகமும் | 3 | 0 |
| 5 பாகமும் ... | 9 | 10 | லோகநாயகி | 1 | 0 |

**விலாசம் : மானேஜர், “ ஆனந்தபோதினி ” ஆபீஸ்,**
**லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.**